# BRICKS BETWEEN

AND

# At Any Cost

ADAPTATIONS OF

## Mr. V. V. Srinivasa Iyengar's Dramas

IN TAMIL

BY

**Rao Bahadur P. SAMBANDAM,**
B.A., B.L.

Author of:

" The Two Sisters," "Galava," "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," " Sarangadhara," " Simhalanatha," " Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," " Markandeya," " The Fair Ghost," " The Merchant of Vanipura," " The Wedding of Valli," "The Eve of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapathy Part I," "The Pongal Feast" or "Sabapathy" Part II, "A Rehearsal" or "Sabapathy" Part III, " Blessed-in a Wife," " The Dancing Girl " " Subbadra-Arjuna " 'Karna The Giver" "Sahadeva's Stratagem" etc. in Tamil, and " Harischandra," and " Yayathi " in English.

*FIRST EDITION.*

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE " PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1929

*All Rights reserved.*

[Price per Copy

# இடைச்சுவர் இருபுறமும்.

## என்ன நேர்ந்திடினும்.

ம-ா-ா-ஸ்ரீ, வி. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார்

அவர்கள் ஆங்கிலத்தில் இயற்றிய நாடகங்களின்

தமிழ் அமைப்பு.

ராவ் பஹதூர்

**ப. சம்பந்த முதலியார்,** பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்:

"லீலாவதி சுலோசனை" "கள்வர்தலைவன்," "மனோஹரன்," "இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்," "சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்," "காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்," "விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "காலவரிஷி," "வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்," "ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி-முதற் பாகம்," "பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம், "ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்" "முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்," "வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்," "தாசிப்பெண்" "சுபத்திரார்ஜுனா" "கொடையாளி கர்ணன்" "சகதேவன் சூழ்ச்சி" முதலியன.

முதற் பதிப்பு

சென்னை:

டௌடன் கம்பெனியாரின்

பியர்லெஸ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1929

# Preface to the First Edition.

Persons intending to stage this or any other drama by me are informed that they must obtain my previous permission before doing so, otherwise they make themselves liable to be prosecuted before a Criminal Court under the latest Copyright act.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.
13th Mar. 1929.

THE AUTHOR.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

**MY PARENTS**

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

**MY FRIEND**

C. RANGAVADIVELU.

# இடைச்சுவர் இருபுறமும்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| சக்ரபாணி முதலியார் | ... | சீமைக்குப் போய்த்திரும்பி வந்த பூஸ்திதிவந்தனுகிய ஒரு முதலியார். |
| நளினி | ... | அவரது மனைவி. |
| வீராசாமி | ... | அவரது வீட்டு வேலையாள். |
| அம்மாயி | ... | வீராசாமியின் பெண்சாதி, முதலியார் வீட்டு வேலைக்காரி. |
| அநந்தாச்சாரி<br>ஜெயகோவிந்த நாயுடு<br>மாணிக்க முதலியார்<br>சாம்பமூர்த்தி ஐயர் முதலியோர் | .. | சக்ரபாணி முதலியார் நண்பர்கள். |
| நடராஜ சாஸ்திரி | ... | கணக்குப்பிள்ளை உத்தியோகம் செய்யும் ஓர் ஏழை பிராம்மணன். |
| சாவித்ரி | ... | அவன் மனைவி. |
| டாக்டர் ராஜா | ... | ஓர் வைத்தியர். |

# இடைச்சுவர் இருபுறமும்

## ஒரு இரட்டைக்காட்சி நாடகம்.

காலம்:—சாயங்காலம்.

இடம்:—சென்னபட்டணத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு பேட்டையின் முக்கிய வீதியில் செங்கற் சுவரினற் பிரிக்கப்பட்ட, பக்கத்தில் பக்கத்திலிருக்கும்படியான, இரண்டு வீடுகளின் பாகங்கள்.

[ரங்கமானது இரண்டு பாதியாக ஓர் செங்கற் சுவரினால் பிரிக்கப் பட்டிருக்கிறது. நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கு இச்சுவரின் உயரமும் அகலமும் தான் தெரியும்; இவ்விரண்டு வீடுகளின் முன்பக்கத்து சுவர்களை எடுத்து விட்டதுபோற் காணும். இடது பக்கத்து வீட்டில் ஒரு விருந்துக்காக அலங்காரம் செய்யப்பட்ட நாற்காலி மேஜைகள் முதலியன வெல்லாம் ஒழுங்காய் வைக்கப் பட்ட ஒரு கூடம் தெரிகிறது. இந்த நாடகத்தில் இந்தப்பக்கம் நடக்கும் காரியங்களெல்லாம் "இடது புறம்" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. வலது பக்கத்து வீட்டின் அறையில் ஒரு கயிற்றினற் பின்னிய கட்டிலின் மீது ஒரு நோயாளி, நடராஜ சாஸ்திரி, படுத்துக் கொண்டிருக்கிருன், அவன் பக்கத்தில் ஒரு முக்காலியின் மீது ஒரு செம்பும் சில மருந்து புட்டிகளும் வைக்கப் பட்டிருக்கின்றன. இங்கு நடக்கும் காரியங்களெல்லாம் "வலது புறம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.]

(இடது புறம்.)

**வீராசாமி** சாமான்களை யெல்லாம் சரியாகவைத்துக்கொண்டும் அவைகளின் மீதிருக்கும் தூசியைத்தட்டிக் கொண்டு மிருக்கிருன்; **அம்மாயி** சற்று தூரத்தில் நிற்கிருள். அவள் பக்கத்தில் ஒரு துடப்பம் கிடக்கிறது.

**அ.** இந்த மாதிரி நேரிடுமென்று யார் நினைத்திருக்கக் கூடும்?

வீ. ஆமாம்—யார் நினைத்திருக்கக்கூடும்? கண்ணில்லாதவர்களைப்போல் தட்டித்தடுமாறி நம்மைத்தப்பிதம் செய்யவிட்டு, அதைப்பார்த்து ஆநந்தப்படும் அந்த பரமேஸ்வரன்தவிர!

[தாசியைத்தட்டிக்கொண்டிருக்கிறன்; அம்மாயி அங்கிருக்கும் ஒரு கண்ணுடியிற் பார்த்து தன் தலைமயிரைக் கோதிக்கொண்டிருக்கிருள்.]

(வலது புறம்.)

ந. [நோயினுல் வருந்தி] ஹா!—ஹா!—ஹா!

(இடது புறம்.)

அ. [தலையைக் கோதியான பிறகு] இதோ! சுவாமியை தூஷியாதே! அவர் என்ன செய்வார் பாவம்! எல்லாம் நாம் முன் செய்தகர்மம், அதன்பலனை இப்பொழுது அனுபவிக்கிறேம்.

வீ. அந்த கர்மத்தை முதல் முதல் நம்மையார் செய்யச்சொன்னது? அதுவுமல்லாமல் நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான கர்மாவைச் செய்வானேன்?—இதோபார்—இந்த நாற்காலியை அந்த மூலையில்வை.

[அம்மாயி அப்படியே செய்கிருள்.]

(வலது புறம்.)

ந. ஐயோ! சிவமே! இப்படிப்பட்ட பொறுக்கமுடியாத பாதையை நான் ஏன் அனுபவிக்க வேண்டும்? நான் என்ன பாபமிழைத்தேன்?

(இடது புறம்.)

அ. அதிருக்கட்டும்—நம்முடைய எஜமானனை,—நல்ல அழகாயும் ஒழுங்காயும் இருக்கிறவர்—அந்த அசங்கியம் பிடித்த குரூபியான முடத்தைப்போய் யார் கலியாணம் செய்து கொள்ளும்படிச் செய்தது?

வீ. வேறுயார் செய்தது? பொம்மைகளை ஆட்டிவைப்பது போல் நம்மை ஆட்டிவிட்டு, மறைந்திருந்து பார்த்து பரிஹாசம் பண்ணுகிறாரே அவர்தான்—அந்த பரமேஸ்வரன் தான்!

அ. என்ன துர்அதிர்ஷ்டம்! இப்படியும் புத்திகெட்டுப் போகுமா மனிதர்களுக்கு?

வீ. உனக்குத்தெரியாதா? எல்லாம் பணத்துக் காகத்தான். ஏதோ நெருங்கினபந்து, அவனுடைய தகப்பனுருக்கு நான்வாக்கு கொடுத்து விட்டேன், என்கிற பெரிய பேச்செல்லாம், அவ்வளவும் மேல்வேஷம்!

அ. சும்மா உளராதே நீ! ஸ்வாமியைப்பற்றி தூஷிப்பது மல்லாமல், எப்பொழுது பார்த்தாலும் மனிதர்களைப் பற்றியும் நீ தவருன எண்ணம்கொண்டிருக்கிறாய். இத்தொட்டு செய்தான், அத்தொட்டு செய்தான், என்று ஏதாவது தப்புசொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும் நீ! இந்த உலகத்திலே ஒருத்தனுவது உனக்கு யோக்கியனுகவாவது, நிஜம் பேசுபவனுவது, ஈவுஇரக்க முடையவனுவது, தயாளகுண முடையவனுவது, இருக்கிறுனென நீ நம்பமாட்டாய்!

வீ. ஏ குட்டி! நீ என்னேடு சண்டை போடவேண்டியதில்லை. உன்னுடைய எஜமானனை, நிரம்பபுத்திசாலி நல்லவர் என்று நீ எண்ணினுல், அவரிடம்போய் அதைச் சொல், உனக்கு ஒரு புதுபுடைவைவாங்கிக் கொடுத்தாலும் கொடுப்பார், அல்லது ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் சம்பளம் உயர்த்தினுலும் உயர்த்துவார், அவருக்குக் கலியாணமாயிருக்கிற சந்தோஷகாலத்தில்.

அ. கலியாணப்பெண்ணை முதலில் பார்க்கட்டும் நான்.

வீ. நான் பார்த்திருக்கிறேன். அந்த அம்மாளுக்கு சாய்கால் அதிகம் உண்டு, உன்பாடு அதிர்ஷ்டம் தான்.

அ. உயர்ந்த ஸ்திதியிலிருப்பவர்களுடைய அங்கஹீனத்தைப்பற்றி அப்படி ஏளனமாகப் பேசாதே. அது தப்பு.

வீ. உயர்ந்தபதவி, தாழ்ந்தபதவி!—தாழ்ந்தபதவி, உயர்ந்த பதவி! எதனால் தாழ்ந்தபதவி உண்டாகிறது? எதனால் உயர்ந்தபதவி உண்டாகிறது? பணம் என்று சொல்லுகிறார்களே, வட்டமாக, அப்படி உருண்டு கொண்டேயிருந்து, கடைசியில் உருண்டேபோய்விடுகிறதே, அது அதிகமாயிருப்பதும் கொஞ்சமாயிருப்பதும் தானே இதற்குக்காரணம்? இன்றைக்குப் பிச்சைக்காரன் நாளை லட்சாதிபதி! இன்றைக்கு நவாபு, நாளைக்குப்பக்கிரி!—கொஞ்சம் யோசனை பண்ணிப்பார்—உனக்கும் எனக்கும் கொஞ்சம் பணம்மாத்திரம் அதிகமாயிருந்தால், இப்பொழுதிருப்பதுபோல் இந்த சோபாவின்பேரில் உட்கார்ந்து கொண்டிருப்பேன், நீ என்பக்கத்திலுட்கார்ந்து கொண்டு நான் போட்டுக்கொள்ள வெற்றிலைமடித்துக்கொடுத்துக் கொண்டிருப்பாய் எனக்கு; நம்முடைய எஜமானுக்கும் எஜமானிக்கும் அந்தப்பணம் கொஞ்சம் குறைவாயிருந்தால்—நான் சொல்லுவதைக்கேள்—நம்முடைய வேலைக்காரர்களாகக்கூட அவர்களை வைத்துக்கொள்ள அவர்களிடம் யோக்கியதையில்லை யென்று நினைப்போம். எப்படி!—இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? இங்கே வந்து உட்காரமாட்டாயா?

[அம்மாயி திடுக்கிட்டு அசைவற்று நின்று அவனைப் பார்க்கிறாள்.]

(வலது புறம்.)

கி. யார் அங்கே?—யாருமில்லையா அங்கே? ஆ!—ஆ!—ஈசனே!

(இடது புறம்.)

அ. எழுந்திரு! எழுந்திரு!—இந்த நிமிஷம் அவர்கள் வந்து நீ அங்கே உட்கார்ந்திருப்பதைப் பார்ப்பார்களாயின் என்ன நடக்கும்?

வீ. நடக்கும்!—என்ன நடக்கப் போகிறது? தள்ளிவிடப் போகிறார்கள்! அவ்வளவுதானே! இவன் இல்லாவிட்டால் இன்னொருவன்; இந்த பத்து ரூபாயில்லாவிட்டால் இன்னொரு பன்னிரண்டு ரூபாய்! நடக்கப் போகிறது!—சக்கரம் இன்னும் கீழே போவதற்கில்லையே? நடக்க—போகிறது!

அ. எழுந்திரு என்றால்—இது தப்பு—ஏதோ சப்தம் கேட்கிறது, ஒரு வேளை அவர்கள் வருகிறார்களோ என்னவோ?

வீ. மாட்டேன், நான் எழுந்திருக்க மாட்டேன். வா இப்படி, வந்து உட்கார் ஒரு நிமிஷம், பணக்கார புருஷனுடைய பணக்காரப் பெண்சாதியைப் போல், பிறகுதான் நான் எழுந்திருப்பேன். [அம்மாயி இங்கும் அங்கும் பார்த்து, பிறகு சோபாவின் பேரில் போய் உட்காருகிறாள்; வீராசாமி அவள் தோளின் மீது கையை வைத்து] இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? நாம் அந்தஸ்திலில்லை! சந்தோஷமாயில்லை? [அம்மாயி பதில் கூறாது இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.]

(வலது புறம்.)

ந. ஹா! ஈசனே! ஈசனே! என்னையேன் இப்படிக் கஷ்டத்துக்கு ஆளாக்குகிறீர்?—இறப்பது மேலாகும்! இறப்பேனாயின் இச்சங்கடத்தினின்றும் நீங்கினவனாவேன்!—யார் அங்கே?

(இடது புறம்.)

அ. [ஏதோ சப்தத்தை கேட்டு எழுந்ததுபோல்] எழுந்திரு! அவர்கள் வருகிறார்கள்!

வீ சத்! அதெல்லாம் கிடையாது. சாயங்காலம் ஆறு மணிக்கு முன்பாக இங்கு வர மாட்டார்கள் அவர்கள், ராகுகாலம் போவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அ. அதுபோனாற் போகிறது. எனக்கென்னவோ கலவரமாயிருக்கிறது, நிரம்ப பயமாயிருக்கிறது, நீ அங்கே படுத்

தூக்கொண்டிருப்பதைப் பார்த்தால்; கொஞ்சம் எழுந்திருந்து செய்யவேண்டியதை யெல்லாம் முடித்து விடு.

வீ. ஏ குட்டி! நிஜமாகச் சொல், நாமும் இப்படி அந்தஸ்திலிருந்து இப்படி சந்தோஷமாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? எப்பொழுதாவது நாம் இப்படி இருப்போமென்று நினைக்கிறாயா?

அ. அந்தஸ்தும் சந்தோஷமும்! மெத்தைகள் தைத்த சோபாக்களிலும், வெள்ளிக் கிண்ணங்களிலும், பட்டுத் துணிகளிலும், இரட்டைக் குதிரை கட்டின கோச் வண்டியிலேயும் மோடார் வண்டியிலேயும் தான் சந்தோஷம் இருக்கிறதோ? இல்லவேயில்லை, சந்தோஷம் என்பது மனதில் இருக்கவேண்டும்.

வீ. [மெல்ல யோசனையுடன் எழுந்திருந்து] ஒருவேளை நீ சொல்லுகிறது வாஸ்தவமாயிருக்கலாம். நீ ஒரு பெரிய வேதாந்தியாகப் பிறந்திருக்கிறாய்!

(வலது புறம்)

சாவித்திரி வருகிறாள்.

சா. [கட்டிலின் அருகிற் போய்] அழைத்தீர்களா? நான் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தேன்—எப்படி யிருக்கிறது உங்களுக்கு இப்பொழுது?

ந. ஆம்—நான் கூப்பிட்டேன்—கூப்பிட்டேன்—ஸ்வாமியை! என்னை கொண்டு போய் விடும்படி! இது என்றால்—பொறுக்க முடியவில்லை!

சா. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்—கொஞ்சம் நேரம்—இது தான் கடைசி நாள்—வயித்தியர் சொன்னாரே.

ந. அப்படிச் சொன்னாரா?—ஆம்—அப்படித்தான் இருக்க வேண்டும்—அப்படித்தான் முடியுமென்று—நான் நினைக்கிறேன்—ஆயினும்—ஆயினும்—நான் போனபிறகு ஐயோ பெண்ணே!—நீ என்ன செய்யப்போகிறாய்?

உன்னை யார் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள்?—நீ எங்கே போவாய்? [நடராஜன் படுக்கையின் மீது சாய்ந்து விழுகிறான், சாவித்திரி தன் முகத்தை மூடி தேம்பி அழுகிறாள்.]

(இடது புறம்.)

வீ. ஏ! வேதாந்தி—இதோ பார்—

அ. வேதாந்தமும் சித்தாந்தமும்! அதெல்லாம் எனக்கென்ன தெரியும்? எனக்குத் தெரிந்ததெல்லாம் நாம் ஸ்வாமியை நம்பி யிருக்கவேண்டும், நம்முடைய கடமையைச் செய்ய வேண்டும், நாம் தப்பு செய்யக்கூடாது, என்பது தான்—[ஒரு புஷ்பம் வைக்கும் படிக்கத்தைக் காட்டி] இதை நான் எங்கே வைப்பது?

வீ. அந்தச் சின்ன மேஜையின் பேரில் வை அதை—அதில் தண்ணீர் இருக்கிறதா?

அ. இல்லை—இதைத் தண்ணீரால் நிரம்பச் செய்யவேண்டுமா?

வீ. சந்தேகமென்ன! எல்லாம் வற்றிப்போயிருக்கிறது இன்றைக்கு—உன்னிடம் உன் பை இருக்கிறதா?

அ. ஏன் கேட்கிறாய்? என்ன, குடிக்கவேண்டுமோ நீ இப்பொழுது? அதுவும் இன்றைக்கு?

வீ. எனக்கு தாகமா யிருக்கிறது. கொஞ்சம் வெளியே போய் ஆநந்த ஆசிரம ஹோட்டலில் ஒரு வாய் காப்பி குடித்து விட்டு திரும்பி வந்து விடுகிறேன்.

அ. நீ எங்கே போவாய், என்ன குடிப்பாய், என்று எனக்குத் தெரியும். என்னிடம் ஒரு காசும் கிடையாது, அப்படி இருந்தாலும் உனக்குக் கொடுக்கமாட்டேன்.

வீ. நீ நல்லவளாச்சே—எனக்கு நிரம்ப தாகமா யிருக்கிறது. எங்கே உன் பை?

(வலது புறம்)

ந. என் நா வரண்டு போகிறது!—எரிகிறது எனக்கு!—நிரம்ப தாக மெடுக்கிறது?—கொஞ்சம் போய்—எனக்குத்தீர்த்தம் கொண்டுவா தாகத்திற்கு?

சா. [அழுவதை நிறுத்தி, முகம் எடுத்துப் பார்த்து] கஞ்சி சித்தமாயிருக்கிறது. அதை நீங்கள் சாப்பிடலாம்—அது உங்கள் தாகத்தைத் தணிக்கும்—

ந. வேண்டாம்! வேண்டாம்!—வேண்டாம்! உன் கஞ்சி எனக்கு வேண்டவே வேண்டாம்! எனக்கு வேண்டியது தீர்த்தம்—தீர்த்தம்—தீர்த்தம்!

சா. வயித்தியர் சொன்னரே—

ந. ஐயோ! என் உயிர் போகிறது! என் கடைசி வேண்டுகோளை மறுக்காதே!—கொஞ்சம் தீர்த்தம்! தாகத்திற்கில்லாமலா சாகச்சொல்லுகிறுய் என்னை! தாகம் தாகம் என்று தண்ணீருக்காக அழுது கொண்டு? [கொஞ்சம் எழுந்திருந்து] நீ செய்யமாட்டாய்?—சரி நான் போய்—[பலஹீனத்தினுல் எழுந்திருக்க முடியாது அப்படியே படுக்கையில் விழுகிறுன்] ஹா! [சாவித்திரி போகிறுள்.]

(இடது புறம்.)

வீ. நீ எனக்குக் கொடுக்கமாட்டாய்? எங்கே உன் பை?
[அவள் உடம்பில் தேடிப்பார்க்கமுயலுகிறுன்.]

அ. இதோபார்! என்னைத்தொடாதே!

வீ. கொஞ்சம் தயவுசெய்! நீதான் என் கண்ணு பெண் சாதி!

அ. மற்றப்பெண்சாதிகள் எல்லாம்?

வீ. எல்லாரையும்விட நீதான் என் கண்ணு!—வா, எங்கே இருக்கிறது பை?

[மறுபடியும் அவளருகிற் போகப் பார்க்கிறுன்]

அ. என் கிட்டவராதே!—இந்தா எடுத்துக்கொள்!

[இடுப்பிலிருந்து தன் பையைப்பிடுங்கி, தரைமீ தெறிகிறுள், வீராசாமி அதை விரைந்தெடுத்து அவிழ்த்துப் பரிசோதித்து, அதிலிருக்கும் வெற்றிலை பாக்கு புகையிலையை எடுக்கிறுன்.]

(வலது புறம்.)

**சாவித்திரி வருகிறுள்.**

சா. இதோ தீர்த்தம், சாப்பிட. எழுந்திருக்கவேண்டாம்! வாயைத்திறவுங்கள், நான் மெல்லவார்க்கிறேன்.

ந. முடியாது! நான் எழுந்திருக்கத்தான் வேண்டும். நான் உட்கார்ந்து நெடநெடவென்று அப்படியே நிரம்பவிழுங்கினுல் தான் எனக்குத் திர்ப்தியாகும்! என்னைப் பிடித்துக்கொள்!

சா. [லோட்டாவை பக்கத்திலிருக்கும் விசிப்பலகைமீது வைத்துவிட்டு, அவனைப்பிடித்து உட்காரவைக்கிறுள், பிறகு லோட்டாவை அவனிடம் கொடுத்து] அதிகமாகச் சாப்பிடாதீர்.

ந. அதிகமாகச் சாப்பிடுகிறதா! எங்கே பிடித்தாய் இந்த லோட்டாவை? போ—போ! பெரிய செம்புநிறையக் கொண்டுவா! [அந்த லோட்டாவைத் தண்ணீருடன், ஒரு மூலையில் எறிகிறுன்] எனக்குக் குளிர்ந்த தீர்த்தம் கொண்டுவா—பனிக்கட்டியைப் போல்-குளிர்ந்திருக்கவேண்டும்! போ—போ— சீக்கிரம் கொண்டுவா!—வீட்டிலிருக்கிற பெரியபாத்திரத்தில்!

சா. வயித்தியர்—

ந. வயித்தியரைக் கொளுத்த! வயித்தியரால் என்னைக்காப்பாற்ற முடியாது! உன்னுலும் முடியாது!—என் உயிர் போகிறது! என் உடல்குளிர்ந்தாவது என் உயிர் போகட்டும்! பிறகு என் உடலை நீ நெருப்பில் வைத்துக் கொ

ருந்தி விடலாம்—போ! போ!—குளிர்ந்த ஜலம்!—மாட்டாய் நீ ?—

[சாவித்திரி போகிருள், நடராஜன் தன்கைகளின் மீது சாய்ந்து கொண்டு, மிரண்டு மயக்கமானப் பார்வையுடன் பார்த்து, பெருமூச்செறிகிருன்.]

(இடது புறம்.)

வீ. என்ன இது ? ஒரு தம்பிடிகூட இல்லேயே உன்பையில் !

அ. அதில் இருக்கிறது என்று உனக்குயார் சொன்னது ? அதிலே இருந்தால் உனக்கு அதை நான் கொடுத்திருப்பேன் என்று எண்ணிருயோ ?

வீ. ஈவுஇரக்கமில்லாத மூதேவி நீ !

அ. கேடுகெட்ட ஓயாக்குடியன் நீ !

வீ. பத்திரம் ! எனக்குக் கோபம் வரும்படிச் செய்யாதே !

அ. உன்னுலே என்னமுடியும் ?

வீ. என்ன ? என்னே எதிர்த்துப்பேச வாயிருக்கிறதா ?

[அவளே அடிப்பதுபோல் அருகில் நெருங்குகிருன்.]

அ. அதோபார் ! அங்கே என்ன இருக்கிறதென்று ! [துடப்பம் இருக்குமிடம் காட்டி] போ—உன் வேலேயைப் பார், இல்லாவிட்டால் உன்பவிஷ்யம் கெட்டுப்போம் !

வீ. [தன்னேத்தடுத்துக்கொண்டு சுற்றிப்பார்த்து] என்னவிந்தை ! மனுஷன் எல்லாவற்றையும் ஆளுகிருன் ! மனுஷி மனுஷனே ஆளுகிருள் !

[வீராசாமியும் அம்மாயும் மௌனமாய், செய்ய வேண்டிய காரியங்களே யெல்லாம் முடித்துக் கொண்டிருக்கிருர்கள்.]

(வலது புறம்.)

சாவித்திரி ஒரு லோட்டாவில் குளிர்ந்த தீர்த்தம் கொண்டுவருகிருள்.

சா. இதோ குளிர்ந்த தீர்த்தம். அதிகமாய்ச் சாப்பிடாதீர்.

ந. இல்லை நான் சாப்பிடுவேன்! [சாவித்திரி கரத்தினின்றும் அந்த லோட்டாவைப் பிடுங்கி, குடித்துவிடுகிறான்.] பரமேஸ்வரா! என்ன குளிர்ச்சியாயிருக்கிறது! இந்த வயித்தியர்களெல்லாம் சுபாவத்திற்கு விரோதமாக மருந்துகளைக் கொடுப்பானேன்? நான் தூங்கப்போகிறேன்.— என்று நினைக்கிறேன்—நெடுநேரம்.

[படுக்கையின் மீது விழுகிறான்; சாவித்திரி அவனை உற்றுப்பார்த்து, அழ ஆரம்பித்து, ஒரு புறமாகப் போகிறாள்.]

(இடது புறம்.)

அ. யாரோ வருகிறார்கள்!

வீ. வேறுயாராவது இருக்க வேண்டும்.

ஜெய கோவிந்த நாயுடு வருகிறார்.

ஜெ. என்ன வீராசாமி! உன்னுடைய எஜமானும் அவர் பெண்சாதியும் இன்னும் வரவில்லையா?

வீ. இல்லை ஐயா, இன்னும் வரவில்லை.

ஜெ. இன்று சாயங்காலம் ஏதோவிருந்து நடக்கப்போகிறதென நினைத்தேன். அதற்காக அவர்கள் மத்தியானமே வந்து விடுவார்கள் என்றெண்ணினேன்.

வீ. பெரிய விருந்தொன்றுமில்லைங்கள், சில சிநேகிதர்களை மாத்திரம் அழைத்திருக்கிறார்கள். ஐந்து மணி சுமாருக்கு ரெயில்வருகிறது, ராகுகாலம் கழித்து கிரஹப் பிரவேசம் பண்ண ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஜெ. எத்தனை மணிக்கு விருந்து? என் காகிதத்தை எங்கேயோ வைத்து விட்டேன்.

வீ. ஆறரை மணிக்கு ஐயா.

ஜெ. மாயவரத்தில் கலியாணத்திற்கு நீ போயில்லையோ, வீராசாமி?

[ஒரு நாற்காலியில் உட்காருகிறார்.]

வீ. போயிருந்தேனுங்கள். வீட்டையெல்லாம் சித்தம் செய்வதற்காக என்னை முன்னே அனுப்பினார்கள். நேற்று காலையில் தான் இங்கு திரும்பிவந்தேன்.

ஜே. உன்னுடைய எஜமானி என்னமாயிருக்கிறார்கள்? நீ பார்த்தாயா அவர்களை? ஜனங்கள் எல்லாம் என்னென்னவோ சொல்லுகிறார்களே?

[அம்மாயி பின்புறமாக இருந்து ஒன்றும்சொல்ல வேண்டாம் என்று வீராசாமிக்கு பலமாகச் சைகை செய்கிறாள்.]

வீ. ஜனங்கள் சொல்லுகிறதுக்கென்னுங்கள்? அது அவர்கள் வழக்கம் தானே.

ஜே. ஆயினும், கலியாணப் பெண்ணை நீ பார்த்தாயல்லவா?

வீ. ஆமாம், பார்த்தேனுங்கள்.

ஜே. எப்படியிருக்கிறார்கள்?

வீ. சௌக்கியமாயிருக்கிறார்கள். ஜுரமாயிருந்ததெல்லாம் கலியாணத்திற்கு முன்பு.

ஜே. நான் கேட்கவந்தது அது அல்ல. அழகாயிருக்கிறார்களா—எல்லாம்—என்று அதைப்பற்றி கேட்டேன்.

வீ. அப்படித்தானிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேனுங்கள்—இல்லாவிட்டால் எஜமான் கலியாணம் செய்து கொள்வார்கள் என்று எண்ணுகிறீர்களா நீங்கள்?

ஜே. எஜமான் இருக்கட்டும் வீராசாமி, உன் அபிப்பிராயம் என்ன?

வீ. அழகாயிருக்கிறது—இந்த சமாசாரங்களெல்லாம்—எங்களைப்போன்ற ஏழைகளுக்கு என்னதெரியுங்கள்?

ஜே. தெரிகிறது—நான் கேட்பதற்குப்பதில் சொல்ல உனக்கு இஷ்டமில்லை. அதிலிருந்து நான் ஊகித்தறியலாமல்லவா?

வீ. அப்படிச்செய்யக்கூடாது நீங்கள், ஏனென்றால் அழகென்பதும் மனதுக்கு ரம்யமாயிருப்பதும், பார்ப்பவர்கள் கண்களைப்பொறுத்ததுங்கள்.

ஜே நீ சொல்லுவது நிரம்பவாஸ்தவம்தான் வீராசாமி—ஆயினும் அந்த அம்மாள் ஒருகாலில் ஏதோ கொஞ்சம் நொண்டுவதாகச் சொல்லுகிறார்களே—அப்படி இருக்குமா ?

வீ. அப்படித்தான் எனக்குத் தோன்றியதுங்கள்—ஆனாலும், ஒருவேளை அதுசுளுக்கினாலிருக்கலாம். வேறு எந்த காரணத்தினாலாவது இருக்கலாம், இல்லையென்று யாரால் சொல்லமுடியும் ?

ஜே. ஆமாம் அதென்னமோ வாஸ்தவம் தான் !—ஆனால் சுளுக்கு எப்பொழுதும் சாஸ்வதமாயிராது பார்.

வீ. சுளுக்குகளைப்பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாதுங்கள்.

ஜே. எல்லோரும் சொல்லுகிறார்களே அந்த அம்மாள் கொஞ்சம் கறுப்பு—அவ்வளவாக அழகுமில்லை யென்று ?

வீ. இதெல்லாம் யாருக்குத் தெரியுங்கள் ? எங்கள் எஜமானைக் கேட்கவேண்டும் இதையெல்லாம் நீங்கள்.

ஜே. ஸ்ரீதனம் அதிகமாயிருந்திருக்கு மென்று நினைக்கிறேன்.

வீ. எனக்கென்ன தெரியுங்கள் ?

ஜே. சரி, இன்றைக்கென்ன வாய்திறந்து பேசமாட்டேன் என்கிறாய் ? என்னவோ ஒரு மாதிரியாக முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய் ? நீ பழயபடி இல்லை—[திரும்பி, அதிகமாய் ஒன்றும் பேசவேண்டாமென்று தன் புருஷனுக்குச் சைகை செய்து கொண்டிருக்கும் அம்மாயியைப்பார்த்து] ஓ ! தெரிகிறதெனக்கு ! அது தான் காரணம் ! அது தானே ?—நல்லது இருக்கட்டும், ஆறரைமணிக்கென்று சொன்னாயல்லவா ? அப்பொழுது வந்து உன் எஜமானையும் அவர் பெண்சாதியையும் கண்டுகொண்டுபோகிறேன்.

[நகைத்துக் கொண்டே போகிறார்.]

அ. [அடங்காக் கோபங்கொண்டு] என்ன பேசினார் பார் அந்த நாயுடு, என்ன அதனப் பிரசங்கி ! எழும்பூரில் இன்

ஞெரு நாயுடு எனக்குத் தெரியும், அவரும் எந்நேரமும் மற்றவர்களைப்பற்றி கெடுதியாகவே பேசிக்கொண்டிருப் பார். எல்லா நாயுடுக்களும் இந்த மாதிரி தான் !

வீ. சீச்சீ! மடத்தனமாகப்பேசாதே! அதில் என்ன கெடுதி ? வாஸ்தவத்தைத்தானே பேசினுர் ?

அ. நல்ல வாஸ்தவம் தான் ! இந்த விஷயங்களிலெல்லாம், இவர் மூக்கை நுழைப்பானேன் ? மறுபடியும் இப்படி செய்யட்டும் பார்!

வீ. ஏன் ? நீ என்ன செய்வாயோ ?

சா. கொஞ்சம் பொறு—பிறகு என்ன நடக்கிறதோபார்.

[இருவரும் மேஜைகளின் மீதில் துணிகளைப் பரப்புகிறுர்கள்.]

(வலது புறம்.)

ந. [படுக்கையினின்றும் திடுக்கிட்டெழுந்து] நான் தூங்கினேனு என்ன ? என்ன பயங்கரமான கனவு !

சா. [திரும்பி அவனருகில் விரைந்து சென்று] என்ன ! என்ன சமாசாரம் ?

ந. நான் கனவு கண்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். என்ன பயங்கரமானது ! ஒரு குன்றின் உச்சியிலிருந்து நான் கீழே விழுந்தது போல் தோன்றிற்று—அடியென் பதில்லாத மிகுந்த ஆழமான ஓர் பெரும்பள்ளத்தில் நேராகவிழுந்தது போல்! அப்பா! அது என்ன திகிலைத் தந்தது! நான் உடம்பெல்லாம் நடுநடுங்கி எல்லாம் தீர்ந்த தென எண்ணினேன். பிறகு தரையின் பேரில் மோதி யதுபோல் ஓர் அதிர்ச்சி உண்டாச்சுது. திடுக்கிட்டெ ழுந்து—கண்விழிக்க—உடம்பெல்லாம் ஒன்றும் பின்ன மாகாததைப்பார்த்து ஆச்சரியப்பட்டேன்—அது நரகத் தின் படுகுழிபோலிருந்தது !

சா. ஆ ! ஈஸ்வரா ! இதெல்லாம் எதைக்குறிக்கிறதோ ?— பரமேஸ்வரா ! கருணைகூரும் ! அவரைக்காப்பாற்றும் ! காப்பாற்றும் !—எனக்காக ! [நடராஜன் பக்கம் திரும்பி]

நீங்கள் உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள். வயித்தியர் நீங்கள் முற்றிலும் நிம்மதியாயிருக்க வேண்டுமென்று சொன்னாரே !

ந. அப்படியே ஆகட்டும்—அது வருகிறது !

[என்று சொல்லிபடுக்கையில் ஒரு புறமாகத்திரும்புகிறான்.]

சா. ஈசன்—திருஉளப்படி—எல்லாம்—ஆகுக!

[ஒரு மூலையிற்போய் உட்கார்ந்து படுக்கையைப் பார்த்தவண்ணமிருக்கிறாள்.]

(இடது புறம்.)

அ. [ஒரு மோட்டார் வண்டியின் சப்தம் வெளியிற்கேட்டு] யார் வண்டி அது ?

வீ. [கடியாரத்தைப் பார்த்து] அது நம்முடைய தாயிராது, இன்னும் ஆறுமணி ஆகவில்லை.

அ. நான் வெளியே போய்ப்பார்க்கிறேன்.

[போகிறாள்.]

வீ. [தரைமீதிருந்து அம்மாயியின் பையை எடுத்து, அதை உதறிப் பார்க்கிறான் அதில் பணம் இல்லையென்று நிச்சயிக்கும் பொருட்டு] ஹா ! என்ன மூதேவி ! இவளைக்கட்டிக்கொண்டு அழுவது போதும் என்று போகிறதெனக்கு!

அம்மாயி வருகிறாள்.

யார் வண்டி அது ?

அ. வயித்தியர் வண்டி, பக்கத்து வீட்டில் நின்றது.

வீ. எந்த வீட்டில் ? நடராஜ சாஸ்திரியார் வீட்டிலா ? யார் அங்கே அசௌக்கியமாயிருக்கிறது ?

அ. உனக்குத்தெரியாதா ? சாஸ்திரியார் சுமார் ஒருவாரமாக நிரம்ப ஜ்வரத்தோடு படுத்த படுக்கையாகக்கிடக்கிறார் ! அவர் பெண்சாதி—நல்ல அழகு, சின்னவயசு—பாபம்! அழுது அழுது கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கிறது. புருஷனும் பெண்சாதியும் என்ன ஒற்றுமையாய் ஆசையாயிருக்கிறார்கள் !

வீ. சாஸ்திரியார், பணம் எல்லாம் போய் கிரம்ப ஏழையாகிப் போய்விட்டார் என்று நினைத்தேனே! மோட்டார் காரில் வந்த வயித்தியர் யார் அது?

அ. அவரை டாக்டர் ராஜா என்று கூப்பிடுகிறார்கள்—கிரம்ப நல்லவர், கெட்டிக்காரர், நல்லசுபாவம், பணக்காரன் ஏழை யென்று பாராமல் எல்லோரிடமும் மிகவும்பட்சமாயிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். எல்லோரும் அவரைத் தெய்வம்போலக் கொண்டாடுகிறார்கள்.

வீ. உன் கதைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க எனக்குக் காலமில்லை. நானிப்பொழுது போய் எல்லாம் சித்தம் செய்யவேண்டும். வெளியில் இருந்து ஜாக்கிரதையாகப் பார்த்து எனக்குத் தெரிவி.

[போகிறான்.]

அ. வாஸ்தவம்! பெண் பிள்ளைகளாகிய நாங்கள் காத்துக் கொண்டும் பார்த்துக்கொண்டும் இருக்கவேண்டியது தானே!

[தன் பையை எடுத்து அதிலிருந்து வெளியில் எறியப்பட்ட வெற்றிலை பாக்கு முதலியவற்றை அதில் மறுபடியும் போட்டு நிரப்ப ஆரம்பிக்கிறாள்.]

(வலது புறம்.)

டாக்டர் ராஜா வருகிறார்.

[சாவித்திரி அவரைக்கண்டதும் எழுந்து தன்முகத்தை மூடித் தேம்பி அழ ஆரம்பிக்கிறாள்.]

டா. அம்மா, கொஞ்சம் பொறுமையுடன் இரு! அவருடைய உயிரைக்காப்பாற்ற வேண்டுமென்றால் நீ இம்மாதிரி யெல்லாம் அழுகைக்கு இடங்கொடுக்கக்கூடாது.

சா. டாக்டர், எனக்கு வேறொருவரும் இல்லை இவ்வுலகில்!

டா. பரமேஸ்வரன் இருக்கிறார்—அவரை நம்பி அவருக்குப் பிரார்த்தனை செய்.

சா. டாக்டர், வேறென்ன இருக்கிறதெனக்கு—உம்முடைய பட்சமும் பரமேஸ்வரன் கருணையுமன்றி !

டா. [நோயாளியின் அருகிற்சென்று] சாஸ்திரியார், எப்படியிருக்கிறீர்கள் இப்பொழுது ?

ந. இன்னும் சாகாமல் இருக்கிறேன்—டாக்டர்—இதுவரையில் ! யமவாதனை அனுபவிக்கிறேன் ! சீக்கிரம் இந்த பாதையெல்லாம் நீங்க, எனக்கு ஏதாவது கொடுத்து விடலாகாதா ?

டா. நீர் நினைக்கிறபடி அப்படி கெடுதியாய் ஒன்றுமில்லை உமக்கு என்று எண்ணுகிறேன். நீர் இன்னும் ஒரு ஐம்பது வருஷம் வாழவேண்டியிருக்குமென நம்புகிறேன். அந்த வியாதி அதன் ஸ்வரூபத்தைக் காட்டித்தானே தீரவேண்டும் ? நீர் இவ்வளவு தாங்கியது விசேஷம், நாளைக்கு இன்னும் சுவஸ்தமாகும்.

ந. ஆம்—நாளை காலை நான் உயிரோடிருந்தால் !—என் முடிவிற்கு நான் நெருங்குகிறேன் என்று எனக்குள் ஏதோ சொல்லுகிறது.

டா. அதெல்லாம் அபத்தம் ! சாஸ்திரி—அப்படியொன்றும் இல்லை. உம்முடைய வியாதி தான் முடிவிற்கு நெருங்குகிறது !—ஏதோபார்க்கிறேன்.

[வயித்தியர் நோயாளியை ஜாக்கிரதையாகப் பரிசோதிக்கிறார்.]

(இடது புறம்.)

அ. ஏதோ பார்க்கிறேன் ! மற்றொரு பை எங்கே ? [தன் இடுப்பிலிருந்து மற்றொரு பையை எடுத்து அதிலிருக்கும் பணத்தை எண்ணி] ஈசனே ! ஈசனே ! இந்தப் பையை மாத்திரம் பார்த்திருந்தால்—ஆ ! பொழுதாச்சுது நான் போகவேண்டும்.

[மறுபடியும் அந்தப் பையை ஒளித்துவைத்துக் கொண்டு வெளியே போகிறாள்.]

(வலது புறம்.)

டா. இந்த ஜ்வரம் உம்மை விடவேண்டியகாலம் ஆகிவிட்டது. இதற்கு ஏழுநாள் ஜ்வரம் என்று பெயர்வைத்திருக்கிறார்கள்; வாஸ்தவமாய் இது நூற்று நாற்பத்து நான்கு மணியிருக்கும் ஜ்வரம்; போன திங்கட்கிழமை சாயங்காலம் உமக்குக் கண்டதாகச் சொன்னீர் அல்லவா? உம்முடைய நாடி நன்றாயிருக்கிறது, உம்முடைய அங்கங்களில் ஒன்றும் அதிகமாய்க் கெடுதியாய் இல்லை. இதுவின்றும் நீர் தப்பிப்பிழைப்பீர். ஜ்வரமானது தன் முழு மும்மரத்தை அடைந்திருக்கிறது, அதனால்தான் உமக்கு இவ்வளவு பாதையைக் கொடுப்பது போலிருக்கிறது.

ந. பாதையைக் கொடுப்பது போலிருக்கிறதா!—ஹா! இந்தப் பொய்யான உலகத்தில் மெய்யானது பாதை ஒன்று தான்!

டா. கொஞ்சம் பேசாமல், பொறுத்துக் கொண்டு நிம்மதியாயிரும். இப்பொழுது நான் உமக்கு ஒரு புதிய ஔஷதம் கொடுக்கப் போகிறேன். அது உம்முடைய பாதையை உடனே தணியச் செய்யும்.

ந. நான் இப்பொழுது கோருவதெல்லாம் அவ்வளவு தான் டாக்டர்.

டா. [எழுந்திருந்து கொஞ்சம் தூரம்போய், ஏதோயோசிப்பது போல் நிற்கிறார்; பிறகு சாவித்திரியிடம்] ஒரு புதிய மருந்துக்காக எழுதியிருக்கிறேன்—ஆனால் இது கொஞ்சம் விலை அதிகமாயிருக்கும், ஒரு வேளை பதினைந்து ரூபாய் விலையிருக்கும். இதற்கு வேண்டிய ரூபாய் தற்சமயம் வீட்டிலிருக்கிறதா என்று நான் கேட்கலாமோ?

சா. இல்லை—டாக்டர்.—ஒரு ரூபாயுமில்லை; என் கழுத்து சரடை விற்ற ரூபாயில் கடைசி ரூபாயை இன்றுசாயங்காலம் செலவழித்து விட்டேன். ஆயினும், என்னுடைய கம்மலும் இன்னும் ஒன்றிரண்டு சிறிய நகைகளுமிருக்

கின்றன. அவர் மாத்திரம் உயிர்பிழைத்தாற் போதும்—எனக்கு நகைகள் எதற்கு! ஆயினும் இன்று இவ்வளவு பொழுதாகி விட்டதே!

டா. [தன்னிடமிருந்து ஒரு நூறுரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டி] தயவுசெய்து எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும். இதைநீ வைத்துக்கொள் அம்மா, சிலவை ஒன்றும் கவனிக்காதே. நான் ஏதோ தர்மமாகக் கொடுக்கிறேன் என்று இதைவாங்கமாட்டேன் என்று சொல்லாதே. உங்களுக்கு எப்பொழுதாவது சவுகர்யமாயிருக்கும் பொழுது இதை உங்களிடமிருந்து வாங்கிக்கொள்ளுகிறேன்.

சா. ஆ! வேண்டாம்! டாக்டர்—அது முடியாது. நீங்கள் வந்து போவதற்கே உங்களுக்குச் சேரவேண்டியதை நாங்கள் கொடுக்கவில்லையே! அதனுடன் இதுவுமா?

டா. அவருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமையல்லவா? உன் சகோதரனிடமிருந்து பெறுவது போல் இதைப் பெற்றுக்கொள் இதற்கு ஆட்சேபனை செய்யாதே!

சா. [யோசனை செய்து, தீர்மானித்து, அந்த நோட்டை வாங்கிக்கொண்டு] ஆம் டாக்டர், இதைவாங்கிக் கொள்ளுகிறேன். எனக்கு இவ்வளவு உபகாரம் செய்யும் இவ்வுலகில் மிகுந்த உத்தமும் பட்சமுமுடைய ஆன்மாவைப் படைத்த உம்மிடமிருந்து, எதையும் வாங்கிக்கொள்ள நான் வேண்டாம் என்று மறுப்பானேன்? அது எப்படி என்னால் முடியும்? நான் திருப்பிக்கொடுப்பதாவது—எதையும்! சுவாமி தான் உமக்கு—

டா. நாளைகாலை நான் வருகிறேன். அவருடைய உடம்பு அனுகூலமாயிருக்குமென்று கோருகிறேன்.

[போகிறார்.]

சா. [அவர் போன திசையில் சற்றுநேரம் உற்றுப்பார்த்துவிட்டு, பிறகு திரும்பி] இக்கலியுகத்திற் கூட மனிதர்களுக்குள் இப்படிப்பட்ட தெய்வங்கள் பிறந்திருக்கின்றனவா!

(இடது புறம்.)

வீராசாமி சொக்காய் தலைகுட்டை முதலியன போட்டுக்கொண்டு வருகிறான்.

வீ. இதோ வந்து விட்டேன்! நான் அதிக காலம் கழித்து வரவில்லை பார்!—ஆ! எங்கே அவள்? நான்மறந்தேன். அவள் வெளியிலேகாத்துக் கொண்டிருக்கவேண்டும்.

அம்மாயி விரைந்து வருகிறாள்.

அ. வா! வா! அவர்கள் வருகிறார்கள்! அவர்களுடைய வண்டி நம்முடைய தெரிவில் திரும்பியதைப் பார்த்தேன்.

வீ. இப்பொழுது என்னைப்பார்த்தால் தடபுடலாக இல்லை?

அ. ஆமாம்! நீ எப்பொழுதும் தடபுடல்தான்! வா சீக்கிரம்!
[இருவரும் போகிறார்கள்.]

(வலது புறம்.)

ந. ஹா! ஹா! என் உயிர் என்னைவிட்டுப் போகிறாற் போலிருக்கிறது! யார் அங்கே? என்ன! நீயும் என்னைக் கைவிட்டாயா?

[படுக்கையினின்றும் கொஞ்சம் எழுந்து அதன்மீது அப்படியே விழுகிறான்.]

(இடது புறம்.)

சக்ரபாணி முதலியாரும் அவருடையமனைவி நளினியும் வருகிறார்கள்.

ச. இது தான் உன் வீடு—நளினி—அதாவது தற்காலம். நமக்கு அந்த சொத்து கிடைத்த பிறகு, ஒரு தோட்டத்திலிருக்கிற பங்களாவுக்குப் போவோம்.

ந. இது எனக்குப் போதும். பெரியவீடுகளி லிருப்பது எனக்கு இஷ்டமில்லை.

ச. நீ அப்படிச் சொல்லக்கூடாது. ஆயினும் என் வீடு உனக்கு திருப்தியாயிருப்பது எனக்கு சந்தோஷம்.

நம்முடைய பாட்டனார் துபாசி ரங்கநாத முதலியார் இந்த வீட்டில்தான் வாழ்ந்திருந்து இங்கேயே காலமானார். நம்முடைய குடும்பத்தில் இது நூற்றைம்பது வருஷத்துக்குமேல் இருந்திருக்கலாம் இந்த வீடு.

ந. ஆனால் இந்த வீட்டை நான் இன்னும் அதிகமாகவிரும்ப வேண்டும்.

அம்மாயியும் அவள் பின்னால் வீராசாமியும் வருகிறார்கள்.

ச. நளினி, அவள்தான் அம்மாயி, வேலைக்காரி. அவளும் அவள் புருஷன் வீராசாமியும் இந்த வீட்டில் பதினைந்து வருஷங்களாக இருக்கிறார்கள்.

ந. அத்தனை வருஷங்கள் தான் ஆச்சுது நானும் இவ்வுலகத்திற் பிறந்து. அம்மாயி, உன் எஜமானர் உன்னைப்பற்றி என்னிடம் அதிகமாய்ச் சொல்லியிருக்கிறார்.

அ. லட்சுமி வருவதற்காக எதிர்பார்ப்பது போல் நீங்கள் எப்பொழுது வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம் நாங்கள்.

ந. எங்கே உன் புருஷன்? அவன்தானா? அவன் பெயர் என்ன?

ச. ஆம்—வீராசாமி.

ந. ஆமாம், நீ கலியாணத்திற்கு வந்திருந்தாயல்லவா?

வீ. ஆமாம் அம்மா, இந்த வீட்டை எல்லாம் சுத்தப்படுத்தி சித்தமாய்வைக்க முன்பு வந்து விட்டேன்.

ச. நாழியாச்சுது நளினி, இன்னும் கால்மணி நேரத்தில் நம்முடைய சிநேகிதர்களெல்லாம் இங்குவருவார்கள், அவர்களையெல்லாம் வரவேற்று அவர்களுடன் நீ பேசவேண்டும். நீ எப்பொழுது வருவாய் என்று அவர்களெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

ந. ஏன? எதற்காக?

ச. அவர்களுடைய ஆப்தநண்பனுடைய அருமையாம் மனைவியென்று தான், சந்தேகமென்ன ?

ந. ஆடவர்களைப் பார்த்து நான் அவர்களுடன் ஏன் பேச வேண்டும் ?

ச. இதோபார் ! நான் சீமைக்குப்போய் அங்கே படித்தவன் ஆச்சுதே ; ஆகவே என் பெண்சாதி கோஷாவாயிருக்கலாமா ?

ந. உம் !—நான் என்ன செய்ய வேண்டும் ?

ச. உள்ளே போய், முகங்கழுவிக்கொண்டு இங்கு வந்து உட்கார், பிறகு நான் சொல்லுகிறேன்.

ந. நல்லது அப்படியே—வா அம்மாயி.

[அம்மாயி யுடன் போகிருள்.]

ச. வீராசாமி—எல்லாம் சித்தமாயிருக்கிறதா ?

வீ. ஆமாம், எசமான்—எல்லாம், தேத்தண்ணீரும் பலஹாரமும் கூட, வரவழைத்து சித்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

ச. எனக்கு ஏதாவது காகிதங்களாவது தந்தியாவதுவந்ததா ?

வீ. இல்லை எசமான்.

நளினி வருகிருள்.

ந. இதோ வந்துவிட்டேன்—நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் ?

ச. இதோ சொல்லுகிறேன் [சுற்றிப்பார்த்து] இந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள், எல்லோரும் போகும் வரையில் இதைவிட்டு எழுந்திருக்காதே; என்னுடைய சினேகிதர்களை நான் இன்னுர் இன்னுர் என்று தெரிவிக்கும் பொழுது, நமஸ்காரம் செய்து விட்டு, பிறகு பேசிக் கொண்டிரு—நான் சொல்வது தெரிகிறதா ?

ந. தெரிகிறது — மிகவும் நன்ருக! வாஸ்தவம் என்னவென்ருல், கால் நொண்டியான பெண்சாதியைக் கட்டிக்கொண்டோமே என்று உங்களுக்கு வெட்கமாயிருக்கிறது, அதை அவர்கள் அறிவது உயக்கிஷ்டமில்லை! அதற்கு என்னை ஏன் கலியாணம் செய்துகொண்டீர்கள்?

ச. நிரம்ப முக்கியமான காரணங்களுக்காகத் தான், அவைகளையெல்லாம், தகுந்த காலத்தில் நீ அறிந்து சந்தோஷப்படுவாய் என்பதற்குச் சந்தேகமில்லை. முதல் நாளிலேயே நீ நொண்டிக்கொண்டு நடப்பதை அவர்கள் எல்லோரும் பார்க்கவேண்டுமென்று ஏன் அவ்வளவு ஆவலாயிருக்கிருய்?

ந. அதைக்கண்டு பிடிக்கவே மாட்டார்கள் அவர்கள் என்று நினைக்கிறீர்களா?—இன்றைக்கில்லா விட்டால்—இன்னொருநாள், அவ்வளவு தானே?

ச. அதல்ல, பட்டணம் முழுவதும் இதைப்பறையடிப்பது எனக்கிஷ்டமில்லை—நாளைத்தினமே. அதற்காகத் தான் எனக்கு நிரம்ப சிநேகிதர்களான சிலருக்கு மாத்திரம் சொல்லி அனுப்பியிருக்கிறேன்.

ந. சரி—நீங்கள் என்னைக் கலியாணம் செய்துகொண்டீர்கள், அவ்வளவு என்மீது தயை புரிந்ததற்காக—நான் உங்கள் சொற்படி நடக்கவேண்டியது தான். உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்! இப்படியாகுமென்று அப்பொழுதே சந்தேகித்தேன்.

[நாற்காலியில் உட்காருகிருள்.]

ச. முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொள்ளாதே! அவர்கள் எல்லாம் சீக்கிரம் இங்கு வருவார்கள்.

ந. நான் என்ன ஒரு அசங்கியம் பிடித்த பொம்மைதானே, நீங்கள் சூஸ்திரத்தை எப்படி இழுக்கிறீர்களோ அப்படியே ஆடுகிறேன் சிரிக்கிறேன்.

ச. இதைவிட கொஞ்சம் சந்தோஷமாக உன் மனதை வைத்துக்கொள்ள முடியாதா உன்ஞல்?

ந. முயன்றுபார்க்கத்தான் முடியும் என்றால்.

ச. அதையாவது செய்! உனக்குப் புண்ணியமாகப்போகிறது!

[சக்ரபாணியும் நளினியும் வரும்விருந்தினரை உபசரிக்க சித்தம் செய்கிறார்கள். வீராசாமி சாமான்களை யெல்லாம் ஒழுங்காக வைத்துக் கொண்டிருக்கிறான்.]

(வலது புறம்.)

ந. எங்கே இருக்கிறாய் நீ? போய்விட்டாயா?—யார் அங்கே? உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது—இன்னும் கொஞ்சம் நிமிஷங்கள் தான்! பதில்கூடச்சொல்ல மாட்டாயா?

சாவித்திரி விரைந்து வருகிறாள்.

சா. கூப்பிட்டீர்களா?

ந. கூப்பிட்டேனா? நான் கத்திக்கொண்டிருந்தேன்! ஈசனுக்குத்தான் தெரியும் எத்தனை நாழிகையாக வென்று!

சா. கொஞ்சம் கஞ்சி கொண்டுவரவா?

ந. உன் கஞ்சியைக்கொண்டுபோய் சாக்கடையில் ஊற்று! தாகம் தாகம் என்று சாகிறேன்! எனக்குத் தண்ணீர் தான் வேண்டும்.

சா. வயித்தியர் எழுதிக் கொடுத்துவிட்டுப்போன புது மருந்து இன்னும் ஐந்து நிமிஷங்களுக்குள் வந்துவிடும் இங்கே; முதலில் அதைச் சாப்பிடும், பிறகு உங்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறேன்.

ந. அந்த ஐந்து நிமிஷத்துக்குள் நான் செத்துப்போய்விடுவேன்!—இப்பொழுதே நீ எனக்குத் தண்ணீர் கொடுக்காவிட்டால்!—கொடுக்கிறாயா?—மாட்டாயா?

சா. ஐயோ! நான் என் செய்வேன்? ஈஸ்வரன் சித்தப்படி ஆகிறது! வென்னீர் தீர்த்தம் வேண்டுமா குளிர்ந்த தீர்த்தம் வேண்டுமா?

ந. சில் என்று!—சில் என்று!—பனிக்கட்டிபோல்!

[சாவித்திரி போகிறாள்.]

(இடது புறம்.)

ச. தேத்தண்ணீர் செய்தாயிற்றா? தயாராக இருக்கிறதா?

வீ. ஆம் எசமான், எல்லாம் தயாராக இருக்கிறது.

(வலது புறம்.)

சாவித்திரி வருகிறாள்.

சா. மருந்து வந்து விட்டது.

ந. நீ அந்த மருந்தைச் சாப்பிடு! எனக்குத் தண்ணீரைக் கொடு.

[எழுந்து உட்கார்ந்து, சாவித்திரி கையினின்றும் லோட்டாவைப் பிடுங்கி தீர்த்தத்தைக் குடித்து விடுகிறான். சாவித்திரி மருந்து புட்டியைத்திறந்து ஒருபுள்ளி மருந்தைக் கொடுப்பதற்கு யத்னம் செய்கிறாள். சாவித்திரிபோகிறாள்.]

(இடது புறம்.)

அநந்தாசாரியார் வருகிறார்.

ச. ஆஹா! அநந்தாசாரியார்! வாருங்கள், க்ஷேமம் தானே?

அ. க்ஷேமம் தான். நிரம்ப சந்தோஷம். என் ஆசீர்வாதம் உங்களுக்கு! நீங்கள் பெருவாழ்வு வாழ வேண்டுமென்பது என் கோரிக்கை.

ச. நாங்கள் இங்கு வந்த முதல்நாளே எங்களை நீங்கள் பார்க்கவந்தது நிரம்ப சந்தோஷம். நான் சில சிநேகிதர்களுக்குத் தான் எழுதியனுப்பினேன். நீங்கள் பட்ட

ணத்திலிருக்கிறீர்களோ அல்லது வெளியே வேலையாகப் போயிருக்கிறீர்களோ என்று சந்தேகம்.

அ. இன்று காலை தான் பட்டணம் திரும்பிவந்தேன் முக்கியமாக.

ச. என் பெண்சாதி—அநந்தாசாரியார் அவர்கள்—தபால் ஆபிசில் டெபுடி சூபரின்டென்டென்ட்.

[அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் நமஸ்கரிக்கின்றனர்.]

ந. தயவு செய்து உட்காருங்கள்.

அ. சந்தோஷம்.

ந. கொஞ்சம் தேத்தண்ணீர் சாப்பிடுகிறீர்களா?—பையா!

அ. நான்—நான்—சாதாரணமாக—நான் சொல்ல வந்தது—இங்கு வருவதன்முன் தான் சாப்பிட்டு விட்டு வந்தேன்.

ந. சோடா ஏதாவது சாப்பிடுகிறீர்களா? லெமனேட்சாப்பிடுகிறீர்களா?

அ. வேண்டாம்-வேண்டாம்-மன்னியுங்கள். ஒன்றும் வேண்டாம் இப்பொழுது, எனக்கு தாகமாக இல்லை.

ந. தாகமாயிருந்தால் தான் ஏதாவது சாப்பிடுகிறார்களா என்ன? ஒரு சம்மர்கப், மாதிரிபாருங்களேன், ஐயங்கார் அவாள்.

ச. அய்யங்கார் அவர்களைத் தொந்திரவு செய்யாதே. அவர் நிரம்ப வைதீகம், நம்முடைய வீட்டில் எதையும் சாப்பிடவுமாட்டார் குடிக்கவுமாட்டார்.

ந. அதை நீங்கள் எனக்கு முன்பே சொல்லியிருக்க வேண்டும்.—என்னை மன்னியும்.

ஜெயகோவிந்த நாயுடும் ராமகிருஷ்ண முதலியாரும் வருகிறார்கள்.

ச. ஆஹா! ஜெயா, க்ஷேமம் தானே?

ஜே. நீங்கள் க்ஷேமம் தானே? நீங்களும் உங்கள் மனைவியும் பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழவேண்டும்!

ச. முதலியார் அவாள் க்ஷேமம் தானே?

ரா. நீங்களும் க்ஷேமம் தானே? உங்களுக்குக் கலியாண மாச்சுது என்று கேள்விப்பட்டேன், ரொம்ப சந்தோஷம். நீங்களிரண்டு பெயரும் பெருவாழ்வுவாழ வேண்டும்!

ச. அது தான் என் பெண்சாதி!—என்னுடைய சிநேகிதர்கள்.—ஜெய கோவிந்த நாயுடு—உம்—பாரியண்டு கம்பெனி துபாசி—ராமகிருஷ்ண முதலியார்—ஹைகோட்டு வக்கில்.

[நளினி அவர்களிருவருக்கும் நமஸ்காரம் செய்ய, அவர்கள் அவளுக்கு நமஸ்காரம் செய்கிறார்கள்.]

ந. தயவுசெய்து உட்காருங்கள், நான் எழுந்திருக்காததற்காக என்னை மன்னிக்க வேண்டும்; இன்றைக்கு என்னால் முடியாது.

ஜே. உங்கள் காலுக்கு என்ன நேர்ந்தது?

ந. [கலவரப்பட்டு] ஒன்றுமில்லை—இன்றைக்கு மாத்திரம். ரெயிலில் இருந்து அரைமணி நேரத்துக்கு முன் தான் நாங்கள் வந்து சேர்ந்தோம்—உங்களுக்குத் தெரியுமே?

ஜே. எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது.

ந. வருத்தப்படவேண்டிய விஷயம் ஒன்றுமில்லை—கொஞ்சம் தேத்தண்ணீர் சாப்பிடமாட்டீர்களா? கொஞ்சம் வேண்டாமா?

ரா. சந்தோஷம்—கட்டாயமாகச் சாப்பிடுகிறோம்.

ந. பையா! இவர்களிரண்டு பெயருக்கும் தேத்தண்ணீர் கொண்டுவா.

[வீராசாமி போகிறான்.]

ஜே. நீங்களும் கொஞ்சம் சாப்பிடமாட்டீர்களா ?

ந. அப்படியே நானும் சாப்பிடுகிறேன்—இன்னும் மற்ற விருந்தாளிகளும் வந்து சேர்ந்தபின்.

ரா. இன்றைக்கு அநேகம் பெயர் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். பாங்கிவட்டிங் ஹாலில் ஒரு முக்கியமான கூட்டம் கூடுகிறார்கள் இன்றைக்கு, அதில் கவர்னர் துரையவர்கள் அக்கிராசனம் வஹிக்கிறார்.

ஜே. ஆனால் முதலியார் ஏது அங்கு போகாதது ?

ரா. இங்கேயும் அங்கேயும் இரண்டிடத்திலும் என்றால் இருக்கமுடியாது. அதல்லாமலும், கவர்ன்மெண்ட் உத்தியோகம் வேண்டும் என்று நான் அபேட்சிக்கவில்லை— ஏதாவது பட்டம் வரவேண்டு மென்றும் நான் அபேட்சிக்கவில்லை.

ச. ஆனால் முதலியார்—நீங்கள் சொல்வது—அங்கே போகிறவர்கள் எல்லாம்—

ரா. அதல்ல; அப்படிச் சொல்லவில்லை நான்—என்னைப் பற்றி மாத்திரம் நான் பேசிக் கொண்டேன்.

வீராசாமி, தேத்தண்ணீர் பலஹாரம் முதலியனவெல்லாம் கொண்டுவருகிறான்.

ந. இந்த சின்ன மேஜையின்மீதுவை அவைகளை. [வீராசாமி அப்படியே செய்கிறான்] இந்தத்தித்திப்புகளைக் கொஞ்சம் ருசிபார்க்கிறீர்களா ?

ஜே. எனக்குக் காரம்தான் இஷ்டம்.

ந. சாப்பாட்டு விஷயத்தில் தான் அப்படி என்று கோருகிறேன் !

அ. குணத்திற் கேற்றபடி உணவு, என்று ஒரு பழமொழி சொல்லுகிறார்கள்.

ஜெ. அப்படியானால் ஒன்றுமே சாப்பிடாதவர்கள் எல்லோரையும் வெறுக்கவேண்டும்! அது தங்கள் குற்றத்தைத் தாங்களே ஒப்புக்கொள்வது போலாகும்!

[இதர விருந்தாளிகள் வந்து வரவேற்கப் பட்டு, எல்லோரும் பட்சணங்களைப் புசிக்க ஆரம்பிக்கிறார்கள்.]

(வலது புறம்.)

சாவித்திரி வருகிறாள், கையில் ஒரு வேளை மருந்தை எடுத்துக்கொண்டு.

சா. அந்தப்புது மருந்தில் ஒருபுள்ளி வார்த்துக்கொண்டு வந்திருக்கிறேன். இதைக் கொஞ்சம் சாப்பிடுகிறீர்களா? டாக்டர் இதைப்பற்றி மிகவும் விசேஷமாகப்பேசுகிறார்!

ந. சுடு உன்வயித்தியரைக் கொண்டுபோய் சுடுக்காட்டில்! மருந்துகளைக்கொடுத்து என்னை யேன் கொல்லுகிறாய்? என் அந்தியகாலத்தில் கூட என்னைச் சும்மா விடமாட்டாயா?

சா. ஐயோ! ஈசனே!—நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? வயித்தியர் இது உம்மை சுவஸ்தப் படுத்தும் என்கிறாரே.

ந. சுவஸ்தப்படுத்திவிடும்—அதற்குச் சந்தேகமில்லை—ரொம்ப சரிதான்! நீ ஒரு மட்டி! வயித்தியரினால் எனக்கு விதித்திருக்கிற ஆயுசை அதிகப்படுத்த முடியுமா? நான் போனபிறகு உன்கதி என்னவாகுமென்று அந்த ஈசனுக்குத்தான் தெரியும்! உன்னுடைய மிகுந்திருந்த நகைகளையும் விற்றுவிட்டாய்! நான் அதற்கு அருஹனாயில்லாதபோதிலும், நீ என் மீது அதிகபட்சம் வைத்து பிரியமாயிருந்தாய்! நான் உனக்குச் செய்த குற்றங்களுக்கெல்லாம் என்னை மன்னிப்பாய்—உன்

மனதைத் திருப்தி செய்வதற்காக இந்தக் கடைசி மருந்தை நான் சாப்பிடுகிறேன்.

[மருந்தைக் கையில் வாங்கிக் கொள்ளுகிறான், அவன் கை நடுங்குகிறது.]

சா. நான் கொடுக்கிறேன் அதை, தயவு செய்து வாயைத் திறவுங்கள்.

[அவன் வாயைத்திறக்க, மருந்தை அவன்வாயில் வார்க்கிறாள்.]

ந. நிரம்ப தித்திப்பாயிருக்கிறது.

சா. வயித்தியர் இது நிரம்ப சிரேஷ்டமான மருந்து என்று சொன்னார். நிம்மதியாகச் கொஞ்சம் தூங்குங்கள்.

[போகிறாள்.]

(இடது புறம்.)

மாணிக்க முதலியாரும், சாப்பமூர்த்தி ஐயரும் வருகிறார்கள்.

ச. விருந்து விஷயத்தில், போகாதிருப்பதைவிட காலம் கழித்தாயினும் போதல் மேலாம், என்பது உண்மை தான்—க்ஷேமந்தானே ?

சா. அது வாஸ்தவமே, ஆயினும் ரெயிலுக்குப்போக வேண்டிவந்தால் அந்தப்பழமொழி அவ்வளவாக உபயோகப்படாது. உங்களுக்குக் கலியாணமானது மிகவும் சந்தோஷம், பதினாறும்பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும்!

மா. அப்படியே என்னுடைய கோரிக்கையும், அண்ணா.

சா. கலியாணத்திற்கு மாத்திரந்தான் நம்மைக் கூப்பிடாது நாமம் போட்டார்.

ச. கடைசியில் திடீரென்று நாள் குறிக்கப்பட்டது. அதல்லாமல் இன்னும் சில கஷ்டங்கள் இருந்தன.

சா. கஷ்டத்தின் பக்கமாகவே நீங்கள் எப்பொழுதும் சாய்கி றீர்போலிருக்கிறதே, முதலியார். அதோ இருக்கிறவர் கள்தான் முதலியாருடைய மனைவியோ ?

ச. வாருங்கள்—என் பெண்சாதி—மாணிக்கமுதலியார், சாம் பமூர்த்தி ஐயர். [நமஸ்கரிக்கிறார்கள்.] உங்களை யெல் லாம் கலியாணத்திற்கு வரவழைக்காததற்காக, விவரத் தைக்கூறி உங்கள் மன்னிப்பைக் கேட்கவேண்டியவனு யிருக்கிறேன். வாஸ்தவம் என்ன வென்றால், நான் வரவழைக்க வேண்டிய அத்தனை சிநேகிதர்களுக்கும் மாயவரத்தில் தகுந்தபடி விடுதி ஏற்பாடு செய்வது முடியாதகாரியமாயிருந்தது.

ஜே. அந்த நியாயம் உதவாது, அது நிற்பதற்குக்கூட இரண்டு காலில்லை. என்னசொல்லுகிறாய் சாம்பமூர்த்தி ?

[சக்கரபாணி தன்மனைவியைப் பார்க்கிறான்.]

சா. உண்மை எப்படியும் வெளியாகும்—இன்றைக்காவது என்றைக்காவது ஒருநாள். இதன்கீழே ஏதோ இரக சியம் இருக்கிறது.

[வெளியில் ஒரு பைசிகல் மணி ஓசை கேட்கிறது. வீராசாமி போகிறான்.]

ஜே. நானும் அப்படித்தான் சந்தேகிக்கிறேன். நாம் கண்டு பிடிப்போம் பிறகு.

வீராசாமி ஒரு தந்தியைக் கொண்டுவருகிறான்.

ச. [மிகுந்த பரபரப்புடன்] சிநேகிதர்களே, என்னை ஒரு நிமி ஷம் மன்னிக்கவேண்டும். [வெளியே போகிறான்.]

அ. பெரிதல்ல, போய்வாருங்கள்—
[கவலையோடிருக்கும் நளினியைப் பார்த்து] முற் காலத்தில் ஒரு தந்தி என்றால் ஒரு பெரிய விஷயமாயிருந்தது, ஏதோகெட்ட சமாசாரம் என்று எண்ணிக் கொண்டிருந் தார்கள்—இப்பொழுதோ—

ந. ரொம்ப சாதாரணமாகி விட்டது! அதைப்பற்றி கவலைப் படுவார் யார்?

[ஜெய கோவிந்து நாயுடும், சாம்பமூர்த்தி ஐயரும் ஒரு புறமாகப்போய் பேசுகிருர்கள்.]

ஜெ. என்ன அவலட்சணமாயிருக்கிருள்! அவர்கள் ஒருவருக் கொருவர் எப்படி பார்த்துக் கொண்டார்கள் என்று கவனித்தீரா? அவளுடைய காலைப்பற்றிய மற்ருெரு கதையும் வாஸ்தவமாகத் தானிருக்கும் என்பதற்கு சந்தேகமில்லை.

சா. படுபாவி! பணத்திற்காக ஆசைப்பட்டு இப்படிப்போய் கலியாணம் செய்து கொள்வானு? கண்டுபிடிப்போம் நாம் அதை.

ஜெ. எப்படி நாம் கண்டுபிடிப்பது?

சா. நீ என்ன பெரியமடையனு என்ன? ஒரு தரம்கூட அவள் எழுந்திருக்கவில்லை யென்பதை கவனிக்கவில்லையா நீ? நாம் உள்ளே வந்த பொழுதுகூட! வேறு என்ன காரண மாயிருக்கக் கூடும்?

ஜெ. ஆமாம்! ஆமாம்! ஆயினும்—அவன் ஏன் இப்படி நடக்கிருன்? எப்பொழுதும் நம்மை இம்மாதிரி மோசம் செய்ய முடியுமென்று நினைக்கிருனு என்ன?

சா. நான் சொல்வதைக்கேள்—எனக்கு ஒரு அற்புதமான யோசனை தோன்றியிருக்கிறது. இரகசியம் சீக்கிரம் வெளியேவரும் பார்!—நாம் கவனிக்கப்படுகிருேம்; நாம் போய் மற்றவர்களுடன் கலந்து கொள்வோம்.

[அவர்களிருவரும் மற்றவர்களிருக்குமிடம் போய்ச்சேர்கிருர்கள்.]

(வலது புறம்)

ந. என்னைக்கூப்பிட்டாயா? நான் தூங்கிக்கொண்டிருந் தேனு? கனவுகண்டேனு?

(இடது புறம்.)

சக்கரபாணி வருகிறான்.

ந. எங்கிருந்துவந்தது தந்தி? என்ன சமாசாரத்தைப் பற்றி?

ச. ஒன்றும் விசேஷமில்லை—பிறகு நீ அறிவாய்.

அ. நாழியாச்சுது, நாங்கள் போக விடை கொடுக்க வேண்டும்.

மா. ஏன் அண்ணா, இப்பொழுதுதான் லட்சாதிபதி பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டீரே, இனி உங்கள் பூர்வீகமான இந்த வீட்டையும் தெருவையும் விட்டு வேறிடம் போவீர்கள் என்று நினைக்கிறேன்.

ச. இல்லை இல்லை! அதை நினைக்கவுமாட்டேன்.

ந. சாயங்காலம் சொன்னீர்களே, இதை விட்டு தோட்டத்தில் பங்களாவிற்குப் போகவேண்டுமென்று நீங்கள் யோசிப்பதாக?

ச. ஆம்—அதற்கப்புறம் அந்த அபிப்பிராயத்தை மாற்றி விட்டேன்.

சா. [நளினி உட்கார்ந்திருக்கும் இடத்திற்குப் பின்னால் உள்ள சுவாருகிற் காண்பித்து.] பாம்பு! பாம்பு! அதோ உங்கள் பின்னால்!

[ஜெய கோவிந்து நாயுடு உட்பட எல்லோரும் பயந்தெழுந்திருக்கிறார்கள்; நளினியும் திடிரென்று எழுந்து நொண்டிக்கொண்டு ஒருபுறமாகப்போகிறாள்.]

ச. எங்கே? எங்கே? [தரையில் பாம்பிற்காகத் தேடிப்பார்க்கிறான்.] பாம்பைக்காணோமே!

சா. அந்த மூலையில் ஏதோ சுருண்டிருக்கிறதே! என்ன அது? வெறுங்கயிறு என்ன?

ச. உங்கள் கண்ணுக்கு என்னவந்தது ?

அ. உம்முடைய பெண்சாதி, ஓடமுயன்று கால் அதிகமாகச் சுளிக்கிக் கொண்டார்கள் என்றுபயப்படுகிறேன்.

ஜே. என்ன மூடனாய் இருக்கிறாய் சாம்பமூர்த்தி! காலில் நிரம்ப காயம்பட்டாற் போலிருக்கிறதே,—நீங்கள் தவறி விழுந்ததை நான் பார்க்கவில்லை.

ச. இல்லை இல்லை! இங்கே நேரிடவில்லை அது. இன்று ரெயிலிலிருந்து எழுந்திருக்கும் பொழுது தவறிவிழுந்தாள்.

ந. நான் எங்கே ரெயிலில்தவறி விழுந்தேன்? நான் கால் நொண்டுவதைப் பற்றி சொல்லுகிறார்கள் அவர்கள்.—நான் பிறந்தது முதல் அப்படித் தானிருக்கிறது அது.

[சக்கரபாணி அவளை உறுத்துப் பார்க்கிறான்.]

இவர்கள் உங்களுடைய சிநேகிதர்கள், இவர்களிடமிருந்தாவது அல்லது மற்றவர்களிடமிருந்தாவது எத்தனை காலம் அதை மறைக்க முடியும்? எல்லாவற்றையும் அவர்கள் சீக்கிரமாகவே அறிந்துவிடுவார்கள்!

அ நிரம்ப நாழிகையாச்சுது. நாங்கள் போகவேண்டும், வருகிறேன் முதலியார் அவர்கள். நான் உத்திரவு பெற்றுக் கொள்ளுகிறேன், வருகிறேன்.

[போகிறார்; மற்றசிநேகிதர்களும் விடைபெற்றுக் கொண்டு வெளியே போகின்றனர்.]

(வலது புறம்.)

ந. சாவித்ரி, அங்கே இருக்கிறாயா ?

சாவித்திரி வருகிறாள்.

சரி—நான் போகிறேன். கடைசிகாலம் சமீபித்துவிட்டாற் போலிருக்கிறது. என் நோயெல்லாம் அடங்கி

விட்டது,—அன்றியும்—அன்றியும்—எனக்குப் பெரும் தூக்கம்— வருவதுபோல் தோற்றுகிறது—நான் போகிறேன்!— ஈசன்—உன்னைக்காப்பாற்றுவாராக!—ஈசனே!—
[தூங்கிவிடுகிறான்.]

சா. [அழுதுகொண்டே] ஹா! ஐயோ! ஐயோ! இறந்து போனார்! வயித்தியர்—வயித்தியர்!—என்ன பிரயோஜனம்?—எல்லாம் தீர்ந்துவிட்டது!—நான் பாழாகிப் போனேன்! பாழாகிப்போனேன்!
[தலையில் அடித்துக்கொண்டு, தரைமீது வீழ்ந்து மூர்ச்சையாகிறாள்.]

(இடது புறம்.)

விருந்தாளிகளெல்லாம் விடைபெற்றுப் போகும்பொழுது, ஜெயகோவிந்து நாயுடு, சாம்பமூர்த்தி ஐயரின் விலாவில் விரலினால் குத்திப்பேசுகிறார்.

ஜெ. [ஒரு புறமாக] பட்சமில்லாப் படுக்காளி நீ.

சா. [ஒரு புறமாக] அவனுக்காக எனக்கு வருத்தமாயிருக்கிறது —ஆயினும் அவனுக்கு இதுவேண்டும்!
[எல்லா விருந்தாளிகளும் போகிறார்கள்.]

ச. வீராசாமீ! அந்த தந்தி என் மேஜையின் பேரில் இருக்கிறது, போய் எடுத்துவா அதை.
[வீராசாமி போகிறான்.]

ந. எதைப்பற்றி தந்தி?

ச. சீக்கிரம் அதைத்தெரிந்து சந்தோஷப்படுவாய்.

வீராசாமீ வருகிறான்.

வீ. இதுதானா அந்த தந்தி ஏசமான்?

ச. ஆமாம், நீ போகலாம். [வீராசாமி போகிறான்.]
[தந்தியை நளினியிடம் எறிந்து] இதோ, இதைப் படித்துப் பார்!

ந. [அதைப் படித்துப் பார்த்து] சரி! ஈசன் திருவுளம் இப்படி இருந்தது போலும்!—உங்களுக்காக தான் விசனப்படு கிறேன். என் தகப்பனுருடைய உயில் பிரகாரம், அந்த சொத்துகளுக்கும் எனக்கும் ஒரு பாத்யதையு மில்லை யென்று பிரிவிகவுன்சில் முடிவாகத் தீர்மா னித்து விட்டார்கள் என்று அர்த்தமா என்ன? அல்லது அதற்குமேல் ஏதாவது அப்பீலுக்கு இட முண்டோ?

ச. இல்லை! இதுதான் கடைசி முடிவு! இனி கோருவதற் கொன்றும் இடமில்லை! நல்ல பிரிவிகவுன்சில் இது! இந் தியாவில் இரண்டு கோர்ட்டுகள் தீர்மானித்ததை மாற்றி, ஹிந்துலா இப்படி யென்று நிர்ணயம் செய்ய! நாம் எப் படியும் ஜெயிப்போம் என்று எண்ணியே இன்றைத்தி னம் கிரஹப்பிரவேசத்திற்கும் விருந்திற்கும் ஏற்பாடு செய்தேன்! இப்படி நடக்குமென்று நான் கனவிலும் நினைத்திருப்பேனுயின்!

ந. நீங்கள் என்னைக் கலியாணம் செய்து கொண்டிருக்கமாட் டீர்கள்! ஏன் அப்படிச் செய்தீர்கள்? நான் உங்களிடம் அப்பொழுதே சொன்னேன், உங்களுடைய குணம் எனக்குந் தெரியும் என்றும், உங்களுக்கு என்மீது கொஞ்சமாவது பிரிய மில்லையென்றும்.

ச. எல்லாம் உன் தாயார் செய்த மோசம்! உன்னையும் உன் சொத்தையும் அடித்துக் கொண்டு போக இன் னெருவன் காத்துக் கொண்டிருக்கிறுன் என்று என்னை நம்பும்படிச் செய்தாள். அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும், பிரிவி கவுன்சலில் விரோதமாளுல் யாரும் உன்னைத் தீண்டமாட்டார்கள் என்று! ஏமாந்தவன் நான்!

ந. உம்! நிரம்ப சந்தோஷம்! ஆகவே என்னைக் கலியாணம் செய்து கொண்டது என் பணத்துக்காக என்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள்!—அப்படி யில்லையென்று என்

னிடம் பிரமாணம் செய்த போதிலும்' [சக்கரபாணி மௌனமாயிருந்து பெருமூச்சு மாத்திரம் எறிகிறான்; நளினி தன் கணவனருகிற் போய்] கவலைப்பட வேண்டாம்! என்னைக் கலியாணம் செய்து கொண்டாயது, இருப்பதை வைத்துக்கொண்டு ஒப்பேற்ற வேண்டியது தான். எது போனாலும் இன்னும் என் தாயார் சொத்து இருக்கிறதல்லவா? அவர்கள் அதை தன் சக்களத்திப் பிள்ளைக்கு வைத்துவிட்டுப் போவார்கள் என்று நினைக்கிறீர்களா என்ன?

ச. என்ன!—அவள் இறந்த பிறகு!—இன்னும் எத்தனை வருஷம் பொறுத்து?

ந. பிடிவாதமாய்ப் பேசாதீர்கள்! இதோ பாரும்—உமக்கென்மீது ஆசை யில்லை உண்மையே!—ஆயினும் நான் உம்மீது ஆசையாயிருக்கிறேன்—நான் எப்படியாவது—

[என்று சொல்லி அவனது தோளின்மீது தன் கையைப் போடப்பார்க்கிறாள்.]

ச. போ! என் எதிரில் நிற்காதே! நீ என்னைத் தொடுவதும் எனக்கு வெறுப்பாயிருக்கிறது!—உன்னைப் பார்ப்பதும் எனக்கிஷ்டமில்லை!

[என்று சொல்லி அவளைப் பிடித்துத் தள்ள அவள் கீழே விழுகிறாள்.]

(வலது புறம்.)

ந. [மெல்ல படுக்கையிற் புரண்டு, பிரக்ஞையைப் பெற்று, எழுந்து உட்கார்ந்து கண்களை நிமிட்டி சாவித்ரி தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்து] என்ன இது? சாவித்ரி! சாவித்ரி!—மூர்ச்சையாயினளா என்ன? அல்லது—அல்லது—

சா. [திடீரென்று விழித்து] என்ன! என் கண்களை நான் நம்பலாமா?—என் நாதா!—ஈசனே!—இப்படியாகுமென்று யார் எதிர்பார்த்திருக்கக் கூடும்?

[என்று சொல்லி தன் கணவன் கரங்களைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டு அவன் முகத்தில் உற்றுப் பார்க்கிறாள்.]

(இடது புறம்.)

[நளினி மெல்ல எழுந்திருக்கிறாள்; சக்கரபாணி கோபமாய் நெறித்துக் கொண்டு நிற்கிறான். வீராசாமி ஓடி வருகிறான். அவன் பின்னால் அம்மாயி தலை காட்டுகிறாள்.]

வீ. [நளினி யிருக்குமிடம் விரைந்து] என்ன அம்மா? எப்படி விழுந்தீர்கள்?

ச. வீராசாமி! போ வெளியே! உன் வேலையைப் பார்!

[வீராசாமி, மெல்ல யோசனையுடன் போகிறான்.]

ந. [மெல்ல பிடித்துக் கொண்டு எழுந்து நின்று] ஈசனே!—ஈசனே! இப்படியாகுமென்று யார் எதிர்பார்த்திருக்கக் கூடும்!

[என்று சொல்லி கோபத்துடன் தன் கணவனைப் பார்க்கிறாள்.]

அ. என்ன நாடகமிது! இப்படியாகு மென்று யார் எதிர் பார்த்திருக்கக் கூடும்!

திரை இறங்குகிறது.

நாடகம் முற்றியது.

# என்ன நேர்ந்திடினும்

## நாடக பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| அக்பர் | ... | டில்லி சக்ரவர்த்தி |
| அபுல்பஜல் | ... | அவரது ஆப்த மந்திரியும் சிநேகிதனும் |
| வீராபாய் | ... | சிற்றூர் ராணுவாகிய உதயசிங்கின்ராணி |
| பத்மினிபாய் | ... | உதயசிங் ராணுவின் தங்கை |
| பிரதாப்சிங் | ... | ரஜபுத்ர சைனியத்தில் ஓர் தளகர்த்தன் |
| அப்துல் கரீம் | ... | அக்பரிடம் சேவகம் செய்யும் ஓர் மகம்மதிய போர் வீரன். |
| ஒரு சிப்பாய் | .... | காவலாள் |

அவர்கள் காட்டிய தைரியம் என்ன ஆச்சரியகரமா யிருந்தது !

அபு. பாதுஷா அவர்களுக்கு—தைரியம் என்று நாம் கூறுகி ரோமே, அந்தக் குணத்தைப்பற்றி ஆலோசித்துப்பார்த் திருக்கிறீர்களா எப்பொழுதாவது ?

அ. ஏன் ? என்ன அதைப்பற்றி ?

அபு. தைரியம் என்று நாம் கொண்டாடுவது, என்ன நேர்ந்த போதிலும் தைரியமாயிருக்கும் குணத்தையே ! அத ஞல் உண்டாகும் பலன் இன்னதென்பதை அணுவள வேனும் யோசியாத அதிலிருக்கும் தன்மையே நமது மனத்தைக்கவர்கிறது. அதிக மடத்தனமாய்த் தோன் றும்பொழுதுதான் அதை நாம் அதிகமாகக் கொண் டாடுகிறோம்.

[சற்று தூரத்தில் வீராபாயும் பத்மினிபாயும் ஹிந்து சன் யாசிகளைப் போல் வேஷம் பூண்டு பாடிக்கொண்டு வரு கிருர்கள்.]

(பாட்டு.)

"வாழ்வாவது மாயம்மிது மண்ணுவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ்செய் மின்றடங் கண்ணுன் மலரோனும்
கீழ்மேலுற நின்றுன் திருக்கேதார மேனீரே."

அ [அதைச் செவிசாய்த்துக் கேட்டு] அந்தப் பிச்சைக்காரர்கள் என்ன இனிமையாகப்பாடுகிறுர்கள் ! அவர்கள் பாடும் பதங்களில் எவ்வளவு உத்தரார்த்தம் அடங்கியிருக்கி றது ! யார் அங்கே ?

ஒரு சிப்பாய் வருகிறுன்.

சி. ஹா ஜுர் ! தங்கள் அடிமை.

அ. அங்கே பாடிக்கொண்டிருக்கும் பக்கிரிகள் யார் ?

சி. ஹா ஜுர், தாங்கள் ஹிந்து பக்கிரிகள் என்று சொல்லுகிறார்கள் கூடாரத்துக் கருகில்வராதபடி அவர்களைத் தடுக்க நாங்கள் முயன்றும், அவர்கள் பாதுஷாவைப் பார்க்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள்; பக்கிரிகளைத் தடுக்கக்கூடாதென்று சர்க்கார் உத்திரவாயிருக்கிறபடியால், நாங்கள் இன்னது செய்வதென்று தெரியாதிருக்க, அவர்கள் இங்குவந்து விட்டார்கள்.

அ. அவர்களை இங்கு அழைத்துக்கொண்டுவா.

[சிப்பாய் போகிறான்.]

அபு. குரலைக்கவனித்தால் அவர்கள் பக்கிரிகளாகத்தோன்றவில்லை. பாதுஷாவின் சமீபத்தில் அதிக நெருக்கமாக நாம் அறியாத பேர்களை அணுகவிடுவது அவ்வளவு யுக்தமல்ல.

அ. நம்பிக்கை நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது; சந்தேகம் சந்தேகத்தை விளைவிக்கிறது.

சிப்பாய் வீராபாயையும் பத்மினிபாயையும் அழைத்துக் கொண்டுவருகிறான்.

வீ. எவன் மகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஈஸ்வரனாயிருக்கிறானோ, அப்படிப் பட்டவன் மொகலாய் பாதுஷா அவர்களுக்கு ஆயுசையும் ஐஸ்வர்யத்தையும் கொடுக்கவேணும் !

அ. நீங்களும் கொடுக்கலாமே, நீங்கள் பக்கிரிகளானபடியால்.

வீ. நாங்கள் வேலையாட்கள்—வேலை செய்யும் கருவிகள்.

அ. [அபுல்பஜலிடம்] இவர்களுடைய குரல் மிகவும் இனிமையாயிருக்கிறது.

[வீராபாயும் பத்மினிபாயும் ஒருவரையொருவர் உற்றுநோக்குகின்றனர்.]

அ. எந்த தேசத்திலிருந்து வருகிறீர்கள் நீங்கள் ?

வீ. எங்களுக்கு இப்பொழுது எந்த தேசமும் சொந்த தேசமில்லை.

அ. எத்தனை வருஷங்களாக இம்மாதிரியாக பக்கிரிகளாக இருக்கிறீர்கள் நீங்கள் ?

வீ. இவ்வுலக இம்பங்களை யெல்லாம் நாங்கள் விடும்படி நேர்ந்தது கொஞ்ச காலத்துக்கு முன் தான்.

அ. உங்களுக்கு மனைவியர் இல்லையோ ?

வீ. எங்கள் கோட்பாடுகளின்படி, நாங்கள் மனைவியரைக் கொள்ளலாகாது.

அ. ஆகவே உங்களுக்கு குழந்தைகளுமில்லை !

வீ. எங்களுக்கு எப்பொழுதும் பெண்சாதிகளே கிடையாது.

அ. இருவரும் இன்னும் மிகவும் சிறு பிராய முடையவர்களாகத்தோற்றுகிறீர்கள்; நீங்கள் ஏன் பக்கிரிகளானீர்கள் ?

வீ. இந்தச் சிறுவயதிலேயே, இந்த உலகத்திலும் உயிரிலும் உள்ள பற்றெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று அப்படி எங்கள் தலைவிதி விதித்தது !

அ. என்னைப் பார்க்கவேண்டுமென்று ஏன் ஆவல் கொண்டீர்கள் ?

[வீராபாய், பத்மினிபாயைக் கடைக்கண்ணாற் பார்க்கிருள்.]

ப. உண்மையை உரைக்குமிடத்து, பாதுஷா அவர்களே — கானத்திலும் பக்கிரிகளிடத்திலும் உங்களுக்குப்பிரீதி அதிகம், என்று உலகம் உம்மைப்புகழ்வதே, இப்படி உங்கள் சந்நிதானத்தில் வருவதற்கு மார்க்கம் தேடும்படியாக எங்களுக்குத்தைரியம் கொடுத்தது.

வீ. உங்களுடைய பெருங்குணங்களெல்லாம், எங்கணும் புகழப்படுவதைக் கேள்வியுற்று, நாங்கள் இறப்பதன்

முன் உங்களைப் பார்க்கவேண்டுமென்று, எங்களுக்குள் பிரமாணம் செய்து கொண்டோம்.

அபு. இன்றைத்தினமே பாதுஷாவை நீங்கள் பார்க்கவேண்டுமென்று பிடிவாதம் செய்ததாக எங்களுக்கு இப்பொழுது தான் தெரிவித்தார்கள். உங்களுடைய அந்திய காலம் அவ்வளவு நெருக்கத்திலிருக்கிறதென, எண்ணினீர்களா ?

வீ. இம்மாதிரியான சந்தர்ப்பங்கள், எங்களுக்கு தினம் கிட்டமாட்டா; அன்றியும் அந்திய காலத்தைப்பற்றி நம்முள் யார் தான், அது இந்த சமயத்தில், இவ்விடத்தில், என்று கூறக்கூடும் ?

அ. ஆம், எப்பொழுதும் இறப்பதற்குச் சித்தமாயிருத்தல் புத்திசாலித்தனமாகும்.

ப. இந்த உடையை நாங்கள் தரித்த பொழுதே நாங்கள் மரணத்துக்கு ஆயத்தமானோம்.

அபு. ஆம், உங்களைப்பார்த்த பொழுது எனக்கு அப்படித் தான் தோன்றியது.

வீ. எங்களுடைய சாஸ்திரப்பிரகாரம், இருப்பதெல்லாம் வெளித்தோற்றமே, உண்மையானது நம்மிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது.

அபு. வெளித்தோற்றத்தை ஊடுருவிப் பார்த்தால் நமக்கு உண்மைபுலப்படாதா ?

வீ. இல்லை ! உண்மைவெளியாகாது — எப்பொழுதும் ! முதல் தோற்றத்திற்குப் பின்னிருக்கும் இன்னொரு தோற்றமாம், அதைப்போலவே இதுவும் மாயமாம்.

அபு. சாதுர்யமாகப் பேசவும் உங்களால் முடியும் என்று தெரிகிறது.

அ. கொஞ்ச நேரத்துக்கு முன் கூடாரத்துக்கு வெளியில் நீங்கள் பாடியதை நாங்கள் கேட்டபொழுது உங்கள்

குரல் மிகவும் இனிமையாக இருந்தது. வாஸ்தவத்தில், யாரோ ஸ்திரீகள் பாடுகிறார்களென்றே ஆச்சரியப்பட்டேன்.

அபு. நீங்கள் ஸ்திரீகளாகப் பிறந்திருக்க வேண்டும்.

வீ. ஆனால் நாங்கள் மிகவும் சந்தோஷப்பட வேண்டும், ஏனென்றால் ஸ்திரீகளாக, பாதுஷாவின் சந்நிதானத்தைக்கிட்ட, எங்களால் முடிந்திராது.

அ. உங்களுடைய சாதுர்ய வார்த்தைகளால் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

வீ. எங்கள் சாதுர்யத்திற்குக் காரணம், தர்மஸ்வரூபியாகிய தங்கள் முன்னிலையில் நாங்கள் இருப்பது தான், என்பதற்கு ஏதேனும் சந்தேகமுண்டோ? நாங்கள் இப்பொழுதிருக்கும் ஸ்திதியில், சாதுர்யமாயில்லாமல் எப்படியிருக்கக்கூடும்?

[சிப்பாய்பிரவேசித்து அபுல்பஜலிடம் ஒரு நிருபத்தைக் கொடுக்கிறான். அபுல்பஜல் அதைப்படித்து, வீராபாய் பத்மினிபாய் இருவர்களையும் சற்று உற்றுப்பார்த்து, நிருபத்தை அக்பரிடம் கொடுக்க, அதை அவர்படித்து வீராபாய் பத்மினிபாயைத்தாமும் சற்று உற்றுப்பார்த்து விட்டு, பிறகு அபுல்பஜலைப் பார்த்து, புன்சிரிப்புக் கொள்கிறார்.]

அ. அப்துல்கரீமை உள்ளே வரச்சொல்.

[சிப்பாய் போகிறான். வீராபாயும் பத்மினிபாயும் கொஞ்சம் கலவரத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளுகின்றனர்.]

அப்துல்கரீம் வருகிறான்—[வீராபாயும் பத்மினிபாயும் அவனைக் கண்டதும் சற்று திடுக்கிடுகின்றனர்.]

அ. பக்கிரிகளே!—உங்களைத்தான்— இந்த மனிதனை நீங்கள் முன்பே அறிவீர்கள் போலும், எங்கே, எப்பொழுது, எவ்விதம், இவனை யறியும்படி நேர்ந்தது உங்களுக்கு?

வீ. இந்த உலகம் எனும் நாடகத்தில் அநேக பாத்திரங்கள் மற்றும் அநேகபாத்திரங்களைச் சந்திக்கின்றன. எப்

பொழுது, எங்கே, எவ்விதம் என்று யாரால் சொல்லத்தகும்? இந்த மனிதனுடைய ஞாபகசக்தி எவ்வளவு நம்பத்தக்கதோ, அவ்வளவு அவன் வார்த்தைகளும் நம்பத்தக்கனவாயின், பாதுஷா அவர்களின் கேள்விகளுக்குத்தகுந்தபடி பதில் கிடைக்கும் என்று, உறுதியாய் நம்பலாம்.

அப்.க. தகுந்த தென்பதும் தகாததென்றும் நாம் பார்க்கும் நிலையிலிருக்கிறது, ஒன்றைச் செய்து முடிக்கக்கட்டுப் பட்டவன், அக்கட்டினை அவிழ்த்துவிடவும் கடன்பட்டிருக்கலாம்.

[கூடாரத்துக்கு வெளியே கொஞ்சம் சப்தம் கேட்கிறது.]

அபு. சிப்பாய்! அங்கே என்ன கூச்சல்?

சிப்பாய் வருகிறான்.

சி. வஜீர்சர்க்கார் அவர்களுக்கு,—முஹம்மதியனைப் போல் வேஷம்பூண்டு பாசறையில் அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருந்த ஒரு ரஜபுத்திரனைக் கண்டுபிடித்தார்கள். காவலாளிகள் அவனைக்கைதியாக்கி பாதுஷாவின் உத்திரவுக்காக இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

அ. பஜல்ஜீ! உண்மையில், இன்றைத்தினம் சாதாரணமாகக் கழிந்தது என்றாவது, அல்லது விசேஷம் ஒன்று மின்றிக்கடந்தது என்றாவது, தாம் குறை கூறுவதற்கிடமில்லை!

அபு. இன்னும் என்னென்ன விசேஷங்கள் நடக்க இருக்கின்றனவோ, யாருக்குத் தெரியும்?

அ. [சிப்பாய்க்கு] அந்த ரஜபுத்திரனைக்கொண்டுவா இங்கே.

[என்று சொல்லி அக்பர் வீராபாய் பத்மினிபாயைப் பார்க்கிறார், அவர்கள் ஒருவரை யொருவர் உற்றுப் பார்க்கின்றனர்.]

சிப்பாய் வெளியேபோய் பிரதாப்சிங்கை அழைத்துக் கொண்டு வருகிறான்.

[பிரதாப் சிங்கைப்பார்த்ததும் வீராபாயும் பத்மினிபாயும் திடுக்கிடு கிறார்கள்; அப்துல்கரீமும் பிரதாப் சிங்கும் ஒருவரையொருவர் விழித்துப்பார்க்கிறார்கள்.]

அ. யாரப்பா நீ? என் பாசறையருகில் நீ சுற்றிக்கொண்டி ருக்கும்படி எப்படி நேர்ந்தது?

அபு. உதய சிங்கினுடைய வேவுகாரர்களின் ஒருவனா நீ? உன் அரசனுடன் மலைகளின் குகைகளிற் பதுங்கி நீ சவுக்கியமாயிருந்திருக்கலாமே?

பி. பாதுஷா அவர்களுக்கு எனது விண்ணப்பம்! யுத்தத் திற்குரிய உமது பாசறையருகில் ஒரு ரஜபுத்திரன் சுற்றிக்கொண்டிருந்தால் அது பாதுஷா அவர்களைக் காப்பாற்றும் பொருட்டன்று என்று உறுதியாய் நம் பலாம். அன்றியும் அந்த ரஜபுத்திரன் அதைமறுக் கமாட்டான்.

அ. இவர்கள்—இப்பக்கிரிகள்—உனக்குத் தெரிந்தவர்களா? [அபுல்பஜலுக்கு] என்ன ஆச்சரியம்! நம்மைத்தவிர மற் றெல்லோரும் இப்பக்கிரிகளை அறிந்தவர்களாகத் தோற் றுகிறார்கள்.

[வீராபாயும் பத்மினிபாயும் மறுபடியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள் ளுகின்றனர்.]

பி. நான் டில்லி பாதுஷாவின் சேவகன் அல்ல, அவருடைய ஜன்மவைரி! என்னைப்பதில் உரைக்கும்படி கட்டாயப் படுத்த முடியாது.

அ. உன்னைக்கடைசி முறை கேட்கிறேன்; உண்மையை முற் றிலும் ஒளியாது உரைத்து, உன் குற்றத்தை யெல்லாம் ஒப்புக்கொள்வாயாயின் நீ உயிர் பிழைக்கலாம், இல்லா விடின் இன்னும் க்ஷணநேரத்தில் நீ இறந்தவனே.

பி. [புன்னகையுடன்] மரணதண்டனை விதிக்கப்படுமென்று, இது தான் முதன்முறை ஒரு ரஜபுத்திரன் பயப்படுத்தப் பட்டான் போலும்!

அபு. ரஜபுத்திரனுக்குக் கூட மனைவிமக்கள் இருக்கின்றனர் அல்லவா?

பி. ஒரு ரஜபுத்திரனுக்கு அவன் மானமே அவன் மனைவி; அவன் உயிர் வாழ்வது அவனது நாட்டின் பொருட்டே.

அ. இம்மாதிரியான வார்த்தைகளை நாம் முன்புகேட்டது ஞாபகமிருக்கிறது, ஆயினும் யோசித்துப்பார், இம்மாதிரியான வீம்புவார்த்தைகளால் அதோ இருக்கும் உன் நண்பர்களுக்கு நீ உதவி செய்வதாக எண்ணினுல், அது முற்றிலும் தவருகும். என்ன சொல்லப்போகிருய்?

பி. நான் ஒன்றும் சொல்லப் போகிறதில்லையென்று.

அ. அவர்கள் யாரென்று எனக்குத்தெரியா தென்று நினைக்கிருயா நீ?

பி. தெரியாதவர்கள் எப்படி பதில் உரைக்க முடியாதோ, அப்படியே தெரிந்தவர்கள் கேள்வி கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அ. உன் உயிரை நீ ஒரு பொருட்டாகப்பாவியாதது, உன்னை இவ்வாறு அவமரியாதையாய்ப் பேசச் செய்கிறது போலும். சிப்பாய்! உடனே சேனுபதியிடம் போய் நமது பாசறையில் ஒளிந்து திரிந்து கொண்டிருந்த இந்த ஒற்றனை, நாளைத் தினம் சூர்யோதயத்திற்கெல்லாம், சிற்றாரின் பெரியவீதியில் தூக்கிவிடவேண்டுமென்று நான் கட்டளையிட்டதாகச் சொல்.

சி. ஹாஜூர் சர்க்கார் உத்திரவின்படி!—[பிரதாப்சிங்கை கூடாரத்தினின்றும் அழைத்துக்கொண்டு போகப் பார்க்கிருன்; வீராபாயும் பத்மினிபாயும், தங்கள் உயிரைக் காப்பாற்ற

முயன்ற பிரதாப்சிங்கை தூக்கிலிடக்கொண்டு போகிறார்கள் என்பதை அறிந்தவர்களாய், ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு இருவரும் ஒரே சமயத்தில் முழந்தாளிடுகின்றனர்.]

வீ. சக்கிரவர்த்தியே! டில்லிபாதுஷா! நாங்களிருவருமே உத்தரவாதம் சொல்லவேண்டிய ஒரு குற்றத்திற்காக, மனிதர்களுக்குள் மிகுந்த தர்மமும் கருணையும் படைத்தவர் என்று உலகமுழுவதும் பெயர் பெற்ற தாம், இந்த மனிதனைத் தூக்கிலிடும்படி உத்தரவு செய்வது சரியன்று.

அ. உண்மையை உரையுங்கள், குற்றத்தை ஒப்புக்கொள்ளுங்கள், யார் நீங்கள்?

[வீராபாய் தன் சன்யாசி உடையையும் தலைகுட்டையையும் களைந்தெறிகிறாள்; பத்மினிபாயும் அப்படியே செய்கிறாள்.]

வீ. சக்கிரவர்த்தியானவர் உண்மையை அறிய விரும்புகிறபடியால், துக்ககரமான இவ்வுண்மையனைத்தும் கேட்டறியட்டும். நான் சிற்றூர் ராணாவின் பட்டமஹிஷி வீராபாய்! இவள் அவருடைய தங்கை பத்மினிபாய். நீங்கள் சிற்றூரைப்பிடிக்க வந்தபொழுது, பரம்பரையாய் வந்த ரஜபுத்திர கோட்பாடுகளுக்கெல்லாம் விரோதமாக, ராணாவானவர், போருக்கேகாது, வெட்கமென்பது சிறிதுமின்றி மலைக்கு ஓடி ஒளிக்கத்தீர்மானித்ததைக் கண்டு, நாங்கள், பெண்பாலர்களாயிருந்த போதிலும், யுத்தப்பயிற்சி சிறிதும் இல்லாதவர்களாயினும், ஆண் உடையைத் தரித்து, எங்கள் சிறுசைனியத்தை உங்களுக்கெதிராக நடத்தினோம். மலையின் மீது மழைபெய்வதை போல் அது வியர்த்தமாயிற்று. நாங்கள் தோற்கடிக்கப்பட்டு, எங்கள் சைனியமெல்லாம் அழிந்து, எங்கள் தேசம் ஜெயிக்கப்பட்டு, எங்கள் கோரிக்கையெல்லாம் பாழாகியது; அதனுடன் எங்கள் நாணமும், சுயகௌரவமும் போனது. ஆகவே நாங்கள், இவ்வளவு கெடுதிகட்கும் துரதிர்ஷ்டங்களுக்கும் காரணபூதமாயிருந்த

உம்மீது பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்து, எப்படியாவது எங்கள் உயிர்களைக் கொடுத்தாவது எங்கள் எண்ணத்தை நிறைவேற்ற இங்கு வந்தோம். ஒரு வார்த்தையிற் சொல்லுமிடத்து, உங்களைப் பார்த்து, என்ன நேர்ந்த போதிலும், உம்மைக்கொன்று, எங்களையும் கொன்று கொள்ள வேண்டு மென்று தீர்மானித்தோம். எங்கள் யத்னத்தில் அதிக பாகத்தை செய்து முடித்தோம், நீங்கள் அறிந்தபடி உங்கள் கூடாரத்திற்குள்ளும் நுழைந்தோம்—ஆயினும், உங்கள் சந்நிதியில் வந்த க்ஷணம், சாந்தமும் கருணையும் பொருந்திய உமது முகமண்டலமானது எங்கள் எண்ணத்தைத் தோற்கடிக்க, எங்கள் குற்றமானது உமது கண்ணுக்குப் புலப்பட, எங்களாலேயே நாங்கள் தண்டிக்கப்பட்டவர்களாய், இங்கு நின்றோம். அதோ நிற்கிறானே அம்மனிதன்—அவனுயிரை நாங்கள் ஒரு முறை காப்பாற்றினோம்—மனிதனாகவும் சுத்த வீரனாகவும் அவனை மதித்து, அவன் எங்களைக் காட்டிக்கொடுக்க மாட்டான் என்று நம்பினோம், ஆயினும் உண்மையில் அவன் எங்களைப் பின் தொடர்ந்து, அவன் எங்களுக்கு முற்றிலும் துரோகியானான். உங்கள் இஷ்டப்படி எங்களை நீர் தண்டியும்; எங்களுக்கு மரண தண்டனையிடும்—ஆயினும், எங்கள் நண்பனாகப் பின் தொடர்ந்த ஒரு குற்றமும் இழைக்காத எங்களுக்காகத் தன்னுயிரையும் இங்ஙனம் இழக்கத் துணிந்த, இம்மனிதனை மாத்திரம் காப்பாற்றும்! கருணைக் கடலாகிய சக்கிரவர்த்தியே! உம்மை இரந்து வேண்டுகிறோம்!

உத்தமிகளாகிய ராணிகளே, எழுந்திருங்கள்! இத்தனை வீரமும் பெருந் தன்மையும் வாய்ந்த நீங்கள், இப்படி என்னெதிரில் முழுந்தாளிடுவது பொருத்தமானதன்று, உங்களுடைய ரஜபுத்ர குலத்திற்குரிய உண்மையான வீரத்தின் பொருட்டும், கௌரவத்தின் பொருட்டும், உங்கள் மானத்திற்காகவும் தேசத்திற்காகவும் நீங்கள்

மேற்கொண்ட முயற்சியின் பொருட்டும், எதனினும் மேலாக, உங்கள் சத்திய வாக்கின் பொருட்டும், இம்மனிதனை மன்னித்து, அவனுயிரை அவனுக்குக் கொடுத்தேன். ஆயினும் ராஜ பக்தியுள்ள என் படையாளியாகிய அப்துல்கரீம் மீது நீங்கள் குற்றஞ் சாட்டியது முற்றிலும் தவறு. அவன் இக்கடிதம் எனக்கெழுதி எல்லா சமாசாரங்களையும் எனக்கு விவரமாய்த் தெரிவித்ததென்னவோ உண்மைதான். இதில் உங்கள் உயிரை நான் காப்பாற்ற வேண்டுமென்று எவ்வளவு மன்றாடியிருக்கிறான் என்பதை நீங்களே பார்ப்பீர்கள். ஆயினும் அந்தக் கஷ்டம் அவன் தனக்குக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. உங்களுடைய குரலைக் கேட்டவுடன் எனக்குச் சந்தேகம் உதித்தது; நீங்கள் இங்கு வந்தவுடன் ஸ்திரீகளுக்குரிய நாணத்தை உங்கள் முகக்குறியில் நான் கண்டவுடன் அந்த சந்தேகமானது அதிகரித்தது; பிறகு உங்கள் பதில்கள் அதை ஊர்ஜிதப் படுத்தியது; எனக்கு முன்பு தெரியாமலிருந்து இந்நிருபத்தில் அப்துல் கரீம் எனக்குப் புதிதாய்த் தெரிவித்ததெல்லாம், வீர மாதர்களாகிய நீங்கள், மலைப்பிரதேசத்திற்கு ஓடி ஒளித்த அந்த பயங்காளி உதயசிங்குக்கு, எப்படி உறவினர் என்பதுதான்.

வீ. ஆண் உடை தரித்தபோதிலும், பெண்களின் தைரியமானது பலஹீனமானது என்பதைக் கண்டோம்.

அபு. தைரியமானது பலஹீனமானதன்று, பெண் பால் என்னும் மேற்போர்வையே, அதை பலஹீனமாக்குகிறது.

அ. உத்தமராணிகளே! உங்களுக்கு நான் ஏதாவது உதவி செய்யக்கூடுமா?

ப. கூடும்! சக்கிரவர்த்தியாகிய தாங்கள் எங்கள் உயிரினையும் வெட்கத்தினையும் உடனே அழிக்கும்படி உத்திரவு செய்யவேண்டும்!

அ. அவ்வாறு நீங்கள் பேசலாகாது—நீங்கள் ஏன் இறக்க விரும்பவேண்டும்?

வீ. சிற்றூர் அந்தப் புரத்தைச் சார்ந்த இரண்டு ஸ்திரீகள் மாறுவேடம் பூண்டு பாதுஷா பாசறைக்குப் போய், அங்கே கைதிகளாகப்பட்டார்கள் என்பது இன்றைக்கோ நாளைக்கோ உலகப்பிரசித்தமாகும். அந்த அவமானம் நேரிட்டபின் நாங்கள் எப்படி உயிர் தரிப்போம்? மரணம் தான் எங்களுக்கு கதி!

அ. அந்த உமது வேண்டுகோளுக்கு நான் உடன்படாவிட்டால்?

வீ. நாங்கள் விரும்பும் ஒன்றை நீர் வெறுத்தவராவீர்.

அ. அப்பா தோமூா பஜல்ஜி! இப்படிப்பட்ட வீரம் பொருந்திய உத்தமமான மனோதிடத்தைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

அப். உங்கள் தேசத்து ஸ்திரீகளெல்லாம் இப்படிப்பட்ட வீரமும் உத்தமமான மனோதிடமுமுடையவர்களா யிருக்கிறார்களா?

வீ. இல்லை! அவர்களெல்லாம் எங்களினும் மேலானவர்கள்—அதிக மேலானவர்கள்—அவர்களுள் ஒருத்தியாவது இப்படி அவமானம் அடைந்தபின் உயிர் வாழ்ந்திராள்.

அ. வீரத்தன்மை பொருந்திய உங்கள் முயற்சியை அவமான காரியமாக நீங்கள் மதிப்பது நியாயமன்று. நீங்கள் எதை வேண்டினும் அதைக் கொடுக்கிறேன், கேளுங்கள்.

ப. வேண்டுவதை நாங்கள் எப்பொழுதும் கற்றோமில்லை.

அ. நீங்கள் கேட்காமலே நான் கொடுக்கப் போகிறதைச் சொல்லுகிறேன். உங்கள் அரசை உங்களுக்குக் கொடுத்துவிட்டேன். [வீராபாய்க்கு] நாளை காலை நீங்களிருவரும் சகலமரியாதைகளுடன் உங்கள் பட்டணம் போவீர்கள்;

அங்கே வீராபாயாகிய நீ உன் புருஷனுடைய ஸ்தானத்தில் மஹாராணியாக முடிசூட்டப்படுவாய்

வீ. சக்கிரவர்த்தியின் கொடையாயிருந்த போதிலும் இப்படிப்பட்ட நிபந்தனைக்குட்பட்டதை நான் எப்படி அங்கீகரிக்கக்கூடும்?

அ. நீ பெண்பாலா யிருந்தபோதிலும் உன்னை திர்ப்தி செய்வது கடினம் அம்மா! ஆயினும், என்ன நேர்ந்த போதிலும், உன்னைத் திர்ப்தி செய்யவேண்டு மென்று நான் தீர்மானித்து விட்டேன். நிபந்தனைகள் ஒன்றுமின்றி, இந்த ராஜ்யத்தை நீ பெற்றுக்கொள்.

வீ. இத்தனை தயாளமும் பெரும் தன்மையும் இவ்வுலகமானது எப்பொழுதாவது பார்த்திருக்கிறதா?

ப. உங்கள் பெருமையானது, எங்கள் நன்றியறிதலைப் போல் அத்தனை பெரிதாக தழைத்தோங்குமாக!

வீ. உண்மையில் உயர்ந்தோரே, என்ன நேர்ந்திடினும், உத்தமராய் விளங்குகின்றனர்!

திரை இறங்குகிறது.

நாடகம் முற்றியது.